989

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்

# ஸ்தலபுராண வசனம்

AUG 193

இது

சிதம்பரம் செந்தமிழ்ச்சங்கவித்வானும் இராமசாமிச்செட்டியார் அவர்கள் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

வாமதேவ-மாணிக்கபட்டாரகரால்

திருத்தப்பட்டு

சூரியனார்கோவில் ஆதீனத்தைச்சார்ந்தவரும் திருக்கூடலையாற்றூரில் வசிப்பவருமாகிய தர்மநல்லூர்

**சுவாமிநாததம்பிரான் சுவாமிகளால்**

சென்னை அமிர்தகுணபோதனி அச்சியந்திரசாலையில்

1-முதல் 80-பக்கம் வரையிலும்,

விஷய அட்டவணை, தேவாரம், பெரியபுராணம், திருப்புகழ், க்ஷேத்திரவரலாறு, பிழைதிருத்தம், டைட்டல் இவைகள்

சி த ம் ப ர ம்

**ஸ்ரீகுஞ்சிதசரண அச்சியந்திரசாலையிலும்**

பதிப்பிக்கப்பெற்றது.

௧—7—1932. [அணா 8.

1848-b.

AUG 193

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்

# ஸ்தலபுராணவசனம்

இது

சிதம்பரம் செந்தமிழ்ச்சங்கவித்வானும் இராமசாமிச்செட்டியார் அவர்கள் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

**வாமதேவ-மாணிக்கபட்டாரகரால்**

திருத்தப்பட்டு

சூரியனார்கோவில் ஆதீனத்தைச்சார்ந்தவரும் திருக்கூடலையாற்றூரில் வசிப்பவருமாகிய தர்மநல்லூர்

**சுவாமிநாததம்பிரான் சுவாமிகளால்**

சென்னை அமிர்தகுணபோதனி அச்சியந்திரசாலையில்

1-முதல் 80-பக்கம் வரையிலும்,

விஷய அட்டவணை, தேவாரம், பெரியபுராணம், திருப்புகழ், க்ஷேத்திரவரலாறு, பிழைதிருத்தம், டைட்டல் இவைகள்

சிதம்பரம்

**ஸ்ரீகுஞ்சிதசரண அச்சியந்திரசாலையிலும்**

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 20—7—1932. [அணா 8.

22 August 1932

184826



சுந்தரமூர்த்திசுவாமி

உ

# விஷய அட்டவணை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| திருவுருவம்—சுந்தரமூர்த்திசுவாமிகள். | | |
| விஷய அட்டவணை | .... | |
| தேவாரம் ... | .... | i–ii |
| பெரியபுராணம் | .... | iii |
| திருப்புகழ் .... | .... | iv–v |
| க்ஷேத்திர வரலாறு | .... | vi–x |
| முகவுரை ... | ... | 3—4 |
| கடவுள் வணக்கம் | .... | 5—6 |
| திருக்கூடலையாற்றூர்மான்மியப்புராண வரலாறு | | 7—9 |
| தக்ஷிணப்பிரயாகை ஸ்தலமஹிமைச்சருக்கம் | | 10—15 |
| அரியயன் அடிமுடி தேடு சருக்கம் | | 16—24 |
| திரிவேணிசங்கமமஹிமைச் சருக்கம் | | 25—35 |
| பிரமன்வரம்பெறு சருக்கம் | | 36—44 |
| நந்திவரம்பெறு சருக்கம் | | 45—50 |
| திருநிர்த்தன சருக்கம் | ... | 51—59 |
| அகஸ்தியர்வரம்பெறுசருக்கம் | ... | 60—64 |
| காத்தியாயனர்வரம்பெறு சருக்கம் | | 64—68 |
| திருமால்திருமணம்புரி சருக்கம் | .... | 68—73 |
| பிரமஹத்திவிமோசனச் சருக்கம் | ... | 73—77 |
| தீர்த்தமஹிமைச் சருக்கம் | .... | 77—80 |
| பிழைதிருத்தம் | .... | 1—14 |


உ
சிவமயம்.

# திருக்கூடலையாற்றூர் தேவாரம்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரி
லடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௧)

வையக முழுதுண்ட மாலொடு நான்முகனும்
பையின வரவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரி
லையனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௨)

ஊர்தொறும் வெண்டலைகொண் டுண்பலி யிடுமென்று
வார்தரு மென்முலையாண் மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரி
லார்வனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௩)

சந்தண வும்புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள் பாவையொ டும்முடனே
கொந்தண வும்பொழில்சூழ் கூடலை யாற்றூரி
லந்தணன் வழிபோந்த வதிசய மறியேனே. (௪)

வேதியர் விண்ணவரு மண்ணவருந் தொழநற்
சோதிய துருவாகிச் சுரிகுழ லுமையோடுங்
கோதிய வண்டறையுங் கூடலை யாற்றூரி
லாதியிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௫)

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரி
லத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௬)

மழைநுழை மதியமொடு வாளர வஞ்சடைமே
விழைநுழை துகிலல்கு லேந்திழையா ளோடுங்
குழையணி திகழ்சோலைக் கூடலை யாற்றூரி
லழகனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௭)

மறைமுதல் வானவரும் மாலய னிந்திரனும்
பிறைநுதன் மங்கையொடும் பேய்க்கண முஞ்சூழக்
குறள்படை யதனோடுங் கூடலை யாற்றூரி
லறவனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௮)

வேலைவி னஞ்சுண்டு விடையது தானேறிப்
பாலன மென்மொழியாள் பாவையொ டும்முடனே
கோலம தாகிக் கூடலை யாற்றூரி
லாலனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௯)

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடு
மாட லுகந்தானை யதிசய மிதுவென்று
நாடிய வின்றமிழா லுவலை யூரன்சொற்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமி திருநாமம்—நெறிகாட்டுநாயகர்.
தேவி திருநாமம்—புரிகுழலாள்.



சிவமயம்.

# திருக்கூடலையாற்றூர் பெரியபுராணம்.

## ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.

வம்புநீ டலங்கன் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு திங்க ளெருக்கணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனா ராட னீடு கூடலையாற்றூர் சார. (௧௦௦)

செப்பரும் பதியிற் சேரார் திருமுது குன்றை நோக்கி
யொப்பரும் புகழார் செல்லு மொருவழி யுமையா ளோடு
மெய்ப்பரம் பொருளா யுள்ளார் வேதிய ராகி நின்றார்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரார் முன்பு. (௧௦௧)

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தசிந் தையராய்த் தாழ்வார்
இன்றியா முதுகுன் றெய்த வழியெமக் கியம்பு மென்னக்
குன்றவில் லாளி யாருங் கூடலை யாற்றூ ரேறச்
சென்றதிவ்வழிதா மென்றுசெல்வழித்துணையாய்ச்செல்ல. ()

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின்றொடர்வார்க் காணார்
வண்டலர் கொன்றை யாரை வடிவுடை மழுவென் றேத்தி
யண்டர்தம் பெருமான் போந்த வதிசய மறியே னென்று
கொண்டெழு விருப்பினோடுங் கூடலையாற்றூர்புக்கார். (௧௦௩)

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னார்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய வார்வம் பொங்க
வாடகப் பொதுவி லாடு மறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப்போந்து திருமுதுகுன்றி னேர்ந்தார். (௧௦௪)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

# திருக்கூடலையாற்றூர் திருப்புகழ்.

தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன தந்ததான

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப்பாய்ந்துகட வோடட மொடாடிவிடு
விஞ்சையாலே;

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ்
வன்புகூரத்;

தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னாடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் போர்ந்துவினை மூடியடி யேனுமுன
தன்பிலாமல்;

தேட்டமுறத் தேர்ந்துமமிர் தாமெனவெ யேகிநம
னோட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுகலி காலனணுகா நினரு
ளன்புதாராய்;



வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேர்ந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கநிலை யாகவைகும்
விஞ்சையோனே;

வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் றூங்குமழு வாளியென தாதைபுர
மேட்டையெரித்தாண்டசிவ லோகன்விடையேறியிட
முங்கொளாயி;

கோட்டுமுலைத் தாங்குமிழை யானஇடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ கானசிவ காமிவிறல்
கூற்றுவனைக் காய்ந்தஅபி ராமிமன தாரஅருள்
கந்தவேளே;

கூட்டுநதித் தேங்கியவெ ளாறுதர ளாறுதிகழ்
காட்டிலுறைச்சேர்ந்தமயிலாவளிதெய்வானையொடு
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில் வாழ்குமர
தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

## திருக்கூடலையாற்றூர் என வழங்கும்

# தக்ஷிணப்பிரயாகை

## க்ஷேத்திர வரலாறு.

இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிவாலயம், ஆதியில் தினகரனென்னும் அரசனால், கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் உள்படத் திருப்பணி செய்யப்பெற்று, நித்திய நைமித்திகாதி பூஜைகள் நடத்தப்பெற்றது. அந்தக் கோயில் ஐந்துகாணி விஸ்தீரணமுள்ளது.

அந்தக் கோயிலுக்குப் பின்புறம் சமீபத்தில் சுவேதநதியும் (வெள்ளாறு), சரஸ்வதிநதியும், மணிமுத்தாநதியும் சங்கமமாகி, அந்தச் சங்கமத்திற்குத் திரிவேணி சங்கம தீர்த்தமென்று பெயர் வழங்கி வருகிறது. அக்கோயிலின் உட்பிரகாரத்தில் நந்திதேவருக்குச் சமீபத்தில் நந்திதீர்த்தம் கிணற்று வடிவாயிருந்தது. ஆலயத்தின் சந்நிதிக்குமுன்பு பிரம தீர்த்தமென்னும் திருக்குளம் இருந்தது. அதன் விஸ்தீரணம் இரண்டேகாலே வீசம் காணி நிலம்.

கலியுகாதி௵ 4959-க்குச் செல்லாநின்ற காளயுக்தி௵ கார்த்திகைமீ க்குச் சரியான கி.பி. 1858௵ ஏற்பட்ட சுவேதநதி, மணிமுத்தாநதிகளின் பிரவாகத்தால் அவ்வாலயத்தின் மேல்புறத்திலுள்ள இரண்டாம் பிரகாரத்திருமதில் அடியோடுவிழுந்துவிட்டது. அப்



பால் சிலகாலத்திற்குப்பின் ஒருநாளிரவில் ஷடி நதிகளின் பிரவாகத்தினால் ஸ்ரீ ஞானசக்தியம்பாகோயில் கர்ப்பக்கிருகத்தினடிப்பாகம் கீழறுக்கப்பட்டது. அச்சமயம் நித்திரைசெய்துகொண்டிருந்த ஆலயபூஜகர் பொன்னையாக் குருக்கள் என்பவர் அம்மன் ஆற்றோடு போய்விடுவதுபோல் இருப்பதாகச்சொப்பனங்கண்டு திடுக்கிட்டு நித்திரைவிட்டெழுந்து, கிராமத்து மகாஜனங்களுக்குத் தெரிவித்து அவர்களையும் உடன்கொண்டு, ஸ்ரீஞானசக்தியம்பா சந்நிதியையடைந்து, கர்ப்பக்கிருகத்துட்சென்று, அம்மன் விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு அர்த்தமண்டபம் வந்தவுடன், மேற்படி கெர்ப்பக்கிருகம் அடியோடு இடிந்து ஆற்றில் விழுந்துவிட்டது. பிறகு மேற்படி அம்மன் விக்கிரகம் சுவாமிகோயிலில் பிரதிஷ்டைசெய்து பூஜை நடத்தப்பெற்றுவந்தது.

பின்பு சிவலிங்கமூர்த்தியும் கவனிக்கப்படாமலிருந்தால் ஆற்றோடு போய்விடும் என்று கருதிக் கூடலையாற்றூர் மணியம் நல்லதம்பிப்படையாக்ஷி பாலபடையாக்ஷி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் என்னும் இவர்கள் கோயிலைப்பிரித்துச் சிவலிங்க முதலிய மூர்த்திகளெல்லாவற்றையும் கோபுரவாசலில் கொண்டுவந்து வைத்தார்கள். பிறகு கலியுகாதி௵ 4971க்குச் செல்லாநின்ற சுக்கில௵ தைமீ ௨௭௳க்குச்சரியான கி. பி. 1870௵ பிப்ரவரிமீ 7௳ சாவடித்தோப்புக்குக் கிழக்கில் ஆலயத்தின் பொருட்டு 71 செண்டு நிலத்தை அகர ஆலம்பாடி முருகப்பிள்ளை கிரையத்திற்குவாங்கி அதில் லக்கம்போட்டுப் பிரித்த பழைய

கோவில் கற்களைக் கொண்டுவந்து சேர்த்தார்கள். சில நாட் சென்றபின் பொன்னையாக் குருக்கள் காலஞ் செல்லவே, பூஜை நடைபெறாமற்போயிற்று. மூர்த்திகளை எல்லாம் கிராமத்து மகாஜனங்கள் பாதுகாத்து வந்தார்கள்.

அப்பால் கிராமத்து மகாஜனங்களும் ஷை முருகப்பிள்ளையும் சிவாலயத்தின் பொருட்டுக் கிரையத்திற்கு வாங்கிப் புதவடை பறித்த இடத்தில் திருப்பணி வேலையை மேற்கொண்டு செய்ய முடியாமல் சிதம்பரத்துக்குச்சென்று அங்கிருந்தயாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களிடம் மேற்கண்ட விஷயங்களை எல்லாம் தெரிவித்தார்கள். அவர்களும் தேவகோட்டைக்குச் சென்று திருக்கூடலையாற்றூர் க்ஷேத்திர மகிமையையும் அங்குள்ள சிவாலய க்ஷீண நிலைமையையும் சீக்கிரம் புதுத்திருப்பணி நடத்தவேண்டுவது அவசியமென்பதையும் சத்திரஞ்செட்டியார் என வழங்கும் தேவகோட்டை ஸ்ரீமான் ராம. அரு. அரு. அருணாசலஞ்செட்டியாரவர்களிடம் தெரிவித்தார்கள். அவர்கள் இவ்விடம் வந்து பார்த்துக்கோபுரவாசலில் வைத்திருந்தமூர்த்திகளைக் கொண்டுபோய் நெடுஞ்சேரி எல்லைக்குச் சமீபத்தில் கலியுகாதி 4980-க்கு செல்லாநின்ற வெகுதான்னிய௵ அர்ப்பிசி௴ 3௳க்குச் சரியான கி. பி. 1878௵ அக்டோபர்௴ 18௳யில் ஏக்கர் 14, செ. 10 நிலத்தை கிரையத்திற்கு வாங்கி அதில் கூரைக்கொட்டகை கட்டி அதில் ஷை சுவாமிகளை பாலஸ்தாபனம் செய்து பூஜை நடத்திவந்தார்கள். அங்கே



கிணறுகட்டி அஸ்திவாரம்போட்டுத் திருப்பணி நடத்திக் கொண்டிருக்கும் பொழுது மேற்படி நதிகளின் பிரவாகத்தால் அஸ்திவாரத்திற்குமேல் ஜலம் பெருகி வந்தமையால் அப்பால் திருப்பணி நடைபெறாமல் நின்றுவிட்டது.

பின்பு பூர்வீக கோவிலுக்கு ஒருமைலுக்குக் கிழக்கே கூடலையாற்றூரிலேயே திருவேங்கட படையாக்ஷி சடையப்பபடையாக்ஷி என்னும் இருவர்களிடம் இரண்டுஏக்கர் இருபத்தோருசெண்டு உள்ள நிலத்தை கலியுகாதி௵ 4982-க்கு செல்லாநின்ற விஷு௵ தை௴ 22௳க்குச் சரியான கி. பி. 1882-௵ பிப்ரவரி௴ 2௳யில் சிவாலயத்தின் பொருட்டுத் தானஸாசனமூலம் பெற்று அந்த இடத்தில் இப்போதுஉள்ள கோவில் திருமாளிகைப்பத்தியைமட்டும் கட்டி அதில் கலியுகாதி௵ 4985-க்குச்சரியான கி. பி. 1884௵ அதாவது தாரண௵ கார்த்திகை மாதத்தில் விக்கிரகங்களைக் கொண்டுவந்து பாலஸ்தாபனம் செய்து பூஜை நடத்திவந்தார்கள்.

அதுமுதலாகவே பிரகிருத கோயில் திருப்பணி ஆரம்பித்து பூர்த்தி செய்யப்பெற்றது. கலியுகாதி௵ 4991-க்கு செல்லாநின்ற கி. பி. 1891௵ ஜனவரி௴ 30௳க்கு விகிருதி௵ தை௴ 18௳ வெள்ளிக்கிழமையும் பஞ்சமிதிதியும் அஸ்தநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் சத்திரம் செட்டியாரென வழங்கும் ராம. அரு. அரு. அருணாசலஞ் செட்டியாரவர்களால் சுவாமி அம்பாள் இருவரையும் பரிவார சகிதமாக ஸ்தாபனம் செய்து அஷ்டகெந்தலேபன மகா கும்பாபிஷேகம்

நடத்தப்பெற்றது. அதுதொடங்கி மேற்படி ஸ்ரீமான் அருணாசலஞ் செட்டியாரவர்கள் மேற்படி தேவஸ்தானத்திற்கு பூஸ்திதிகளை சொந்தத் திரவியம் கொடுத்துக்கிரையம்வாங்கியும் அபிஷேகநைவேத்திய முதலிய படித்தரங்களைத் திட்டம்பண்ணியும் கோவிலுக்கு வேண்டிய வேலைக்காரர்களை ஏற்படுத்தியும் அவர்கள் வாசஞ்செய்யக் கிருஹங்கள் அமைத்தும் அவர்களே தர்மகர்த்தாவாக இருந்து பரிபாலித்து நடத்திவந்தார்கள். அவர்கள் கலியுகாதி௵ 5001-க்கு செல்லாநின்ற கி. பி. 1901௵ ஜனவரி௴ 7௳க்கு சார்வரி௵ மார்கழி௴ உ௪௳ சிதம்பரத்தில் ஸ்ரீநடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாதநிழலை அடைந்தார்கள். அதன்மேல் அவர்களுடைய பௌத்திரர் பேட்டிவயல் & கிறைமங்கலம் ஜமீன்தார் ராம. அரு. அரு. ராம. அருணாசலஞ்செட்டியாரவர்கள் கி. பி. 1901௵ ஜனவரி௴ 8௳ முதல் மேற்படி தேவஸ்தானத்தைப் பரிபாலித்து வருகின்றார்கள். இவர்கள் காலத்திலும் சொந்தத் திரவியங்கொடுத்து அநேக பூஸ்திதிகள் வாங்கிவைத்திருக்கிறார்கள். அவர்கள் பரம்பரை நீடூழி வாழ்க.

ஷை தேவஸ்தானத்தில் பிரதி வருஷங்களிலும் மாசி௴ நடக்கும் 13-நாள் பிர்ம்மோத்ஸவத்தை உள்ளூர் கிராமத்து மகாஜனங்களும் பக்கத்துக் கிராமமிராசுதார்களும் நடத்தி வருகிறார்கள்.

| | |
|---|---|
| திருக்கூடலையாற்றூர்<br>1932௵ ஜூன்௴ 1௳<br>தமிழ் ஆங்கீரஸ௵<br>வைகாசி௴ 19௳ | சூரியனார் கோவில்<br>ஆதீனத்தைச்சார்ந்தவரும்<br>திருக்கூடலையாற்றூரில் வசிக்கும்<br>தர்மநல்லூர்<br>சுவாமிநாத தம்பிரான். |

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்

# ஸ்தலபுராண வசனம்.

இது

சிதம்பரம் செந்தமிழ்ச்சங்க வித்வானும்,

ராமசாமிச் செட்டியார் அவர்கள் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதரும் ஆகிய

வாமதேவ மாணிக்கபட்டாரகரால்

திருத்தப்பட்டு,

தருமநல்லூர்-சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளால்

சென்னை

அமிர்தகுணபோதினி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

302, தங்கசாலை வீதி, சென்னை.

அவர்களிடமிருந்து காலஞ் சென்ற பாளையங்கோட்டை மணியம் சரவணபிள்ளை பேரூர் மணியம் கிருஷ்ணபிள்ளை இவர்களின் திரவிய சகாயத்தால் ஷை. மான்மியத்தைப் பெற்று வடமொழியின்றும் மொழி பெயர்த்து வைத்திருந்த காப்பி கைதப்பிப் போய் மீட்டு மறிதிற்கிடைக்கப் பெற்றதை. ஷை நல்லசிவம் பிள்ளையவர்கள் என்னிடம் தந்தார்கள். அதனையடியேன் பெற்று. ஷை மாணிக்கபட்டாரகரவர்களிடமே கொடுத்து. சீர்திருத்தஞ் செய்து சில பிரபுக்களின் திரவ்யசகாயத்தால் இதனை அச்சிடுவித்தேன்.

சிவ பக்தர்களனைவரும் இப்புராணப் பிரதியை வாங்கி வாசித்து அம்மான்மியத்தையறிந்து திருக்கூடலையாற்றூரை யடைந்து திருவேணி சங்கம ஸ்நானஞ் செய்து நிர்த்தவல்லபேசுரரைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு அடைவார்களென்று திருவருளைச் சிந்திக்கிறேன்.

இங்ஙனம்.
அடியார்க்கெளியன்
சூரியனார் கோவில் ஆதீனத்தைச்சார்ந்தவரும்
திருக்கூடலையாற்றூரில் வசிக்கும்
தர்மகல்லூர்
(சுவாமிநாததம்பிரான்.)

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்

# ஸ்தலபுராண வசனம்.

## விநாயகர் வணக்கம்.

திங்கள்வெண் ணதியின்றென்பாற் றிகழ்பிர யாகையென்னும்
மங்கல நகரின்காதை வண்டமிழ் மொழிவான்வேண்டி
யங்கண்வாழ் முதசாம லைங்கரப் பெருமான்பாத
பங்கய மலரெம்முள்ளம் பதிதரப் பரவிவாழ்வாம்.

## கடவுள் வாழ்த்து.

### சபாநாயகர்.

திருவளர் நறுந்தண் டேன்றுளி பிலிற்றுஞ் செழுந்துழாய்ப் பாடலையங்கோவு, மருவளர் கமலத் தேவுமே வாராய் மணிசெழு மன்றெருகாது, முருவளர் பசமாட் டேனைய காது முதுதலை யுடைய ராய்த் திகழ் நங், குருவளர் கடுக்கைச் சடைமுடிப் பெருமான் குரை கழற் சேவடிகுறிப்பாம்.

### சிவகாமசுந்தரி.

வெள்ளிதழ்க் கமலச்செல்விநா யகன்றன் மிளிர்பவித்திரிபிம யத்தி
னள்ளிருட் கடந்த றனிமக னெடிய நாரணன் றங்கைநூர்ப் படுத்த
வள்ளியை மெடுவே னருகாத் தொருவன் மதகரி முகவனாம் பலத்திற்
றள்ளிய வென்று பெறுஞ்சிவ காமசுந்தரி பதமலர் தொழுவாம்.

### நிருத்தனவல்லபேசுரர்.

நிருத்தன விழைபு மாலோன் செம்பதுமத்து மேலோன்
உருத்தனர் பொருது நிற்ப வவர்செருக் கொழிக்குஞ் சோதி
கருத்தனர் கடவுட் சேர்த்தெக் கணப்பிர யாகை வாழும்
நிருத்தன வல்லார் தன் திருவடி நினைந்து வாழ்வாம்.

### ஞானசத்தி.

பாடலையாற்றும் பெருமான் சுந்தரர்க்கு நெறியருளு பரமனுக்கி
கூடலையாற் றருபதியாயொருபதியும் பொருவரிதாய் நிகழுமந்தக்
கூடலையாற் றூரமருஞ்சிற்சத்தி ஞானதிருவைக்கு சேயக்கோர்
நாடலையாற் றுதிகாவாற் சூழ்துயரைத் தெப்போதுமுளைத் தன்னில்
[வைப்பாம்.

### பராசத்தி.

புரிவேணி நிருத்தனவல் லவன்புரியுந் தொழிலனைத்தும் பொருவில்லாவிற், குரிவேணி யெனவுதவியவன்மேனி பிரியாம லொளிர்பூங் கொம்பை, விரிவேணி யனவிடையுங் கனதனமூர்த்தின மெழில் செய்மென்மையாளை, திரிவேணி சங்கமத்தின் வருமேனி விழிப்பவளையச் சிந்தைசெய்வாம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கூடலையாற்றூர் மான்மியம்

# புராண வரலாறு.

சீருஞ் சிறப்பும் பொருந்திய நைமிசாரண்யத்தில் வாழ்கின்ற சௌனகாதி முனிவர்கள், அஷ்டாங்கயோகஞ் செய்பவர்கள், பிரமத்தை யறிந்தவர்கள், செருக்கற்றவர், அகங்காரம் இல்லாதவர்கள், மகாத்மாக்கள், அறிஞர்கள், உண்மையான விரதங்களை அநுஷ்டிக்கிறவர்கள், ஐம்புலன்களை வென்றவர்கள், கோபத்தைப் போக்கினவர்கள், அனைத்துயிர்களிடத்தும் கருணையுள்ளவர்கள், இன்னும் பற்பல நற்குண நற்செய்கைகள் உள்ளவராவார்கள்.

இம்முனிவர்கள், முத்தியை யெளிதில் தருவதாயும், மிக்க தூய்மையுடையதாயும் யிருக்கிற நைமிச வனத்தில், சச்சிதானந்த சொரூபராயும், இயமனைச் சங்கரித்தவராயும், உமையொருபாகராயும், எண்ணிய எண்ணியாங்கு ஈபவராயுமிருக்கிற பரமசிவனைக் குறித்தும், திருமாலைக் குறித்துந் தவஞ்செய்தார்கள்.

ஒருகாலத்தில், மகாத்மாக்களான முனிவர்கள் இருபத்தாறுயிரவரும், அவர்களுடைய எண்ணிறந்த மாணவ முனிவர்களும், ஒருங்குகூடி, முத்திசாதனங்களை யறிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களாய், மறத்தைப்போக்கி அறத்தைத் தருவதான சிவ கதைகளைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில், வியாசமுனிவரது மாணாக்க

ரும், மிக்க கீர்த்தியை யுடையவரும், கருணாநிதியாயுமிருக்கிற சூதமஹாமுனிவர், சித்த சுத்தியைக் கொடுக்கிற நைமிசாரண்யத்திற்கு வந்தார். வந்த சூதமுனிவரை சௌனகாதி முனிவர்கள் தரிசித்து வணங்கி பின் வருமாறு பிரார்த்தித்தார்கள்.

சூதமஹாமுனிவரே தேவரீர் சமஸ்தமான புண்ணிய புராணங்களைச் சத்தியவதி குமாரரான வியாசமஹா முனிவரிடமிருந்து கேட்டு, அறிந்திருக்கிறீர். ஆகையால், பூவுலகில் வணங்கத்தக்க புண்ணியத் தலங்கள் தீர்த்தங்கள் எவை? சம்சார சமுத்திரத்தினின்றும் முத்திக்கரையை ஆன்மாக்கள் எவ்வாறு அடையும்? மானிடர்களுக்கு திருமாலிடத்திலாவது, சிவபிரானிடத்திலாவது பக்தி எப்படியுண்டாகும்? போக மோக்ஷங்கள் விரைவில் எவ்விதம் சித்திக்கும்? இவற்றை யெல்லாம் கருணையுடன் அடியேங்களுக்குச் சொல்லியருளவேண்டும். மந்தணமான விஷயங்களைக் குருமார்கள் சீடர்களுக்குத்தான் சொல்லுவார்கள். முன்னொரு காலத்தில் தக்ஷிணகைலாச மான்மியமும், திரிவேணி சங்கம மான்மியமும் தேவரீரால் திருவாய் மலர்ந்தருளப்பட்டன.

இப்பொழுது, திருவேணி சங்கமமான்மியத்தை மீட்டும் கேட்க விரும்புகிறோம். அதைக் கேட்டதினால் ஐயம் நீங்குகிறது. ஆதலால், அக்கதையினை மந்தணமாயிருக்கும் எங்களுக்கு விளங்க விரித்துரைத்தல் வேண்டும், என்று பிரார்த்தித்தார்கள்.

இதைக்கேட்ட சூதமஹாமுனிவர் "முனிவர்களே, உலகத்துக்கு இன்பமாயும், பிரத்யக்ஷமாயும், முத்தி சாதனமாயு மிருக்கிற திருவேணி சங்கமமென்கிற கூடலையாற்றூர் மான்மியத்தைச் சொல்ல வேண்டுமென்று நன்மையான வினாவை நிகழ்த்தினீர்கள். அதனால், நீங்கள் தலையுள்



வர்கள், எல்லா அறநிலையும் உணர்ந்தவர்கள், உலகத்தைக் காக்கிறவர்களானீர்கள். ஆகையால், பொறுமையுடன் கேளுங்கள். நீங்கள் வினவிய வினாக்களுக்கு, ஆயிரமுகங்களையுடைய ஆதிசேடனாலும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனாலும் கூற இயலாதென்றால், நான் எவ்வாறு கூறுவேன். ஆயினும் பாராசரர் புத்திரரும் எனது மஹா குருவும் ஆகிய வியாசருடைய அனுக்கிரகத்தால் சிரமத்தைப் போக்குவதான சச்சிதானந்த சொரூபத்தை ஆதரவுடன் சொல்லப்போகிறேன் என்று சொல்லத் தொடங்கினார்.

கூடலையாற்றூர் மான்மிய புராண வரலாறு

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

தக்ஷிணப் பிரயாகை

# ஸ்தலமகிமைச் சருக்கம்.

சௌனகாதி முனிவர்களே! மேன்மையானதும், நிர்மலமானதுமான ஞானத்தைக் கொடுக்கிறவராயும், தத்துவ சொரூபியாயும், அத்வைதராயும், குணரகிதராயும், ஏகராயும், பிரம சொரூபியாயும், எல்லா உலக காரணராயும், சமஸ்த தேவர்களால் துதிக்கத் தக்கவராயுமுள்ள பரமசிவனை நமஸ்கரித்து வேதத்திற் கொப்பான இன்பத்தைத் தருங் கதையைச் சொல்லுகிறேன்.

மூவுலகிலும் பிரசித்திபெற்ற பிரம விஷ்ணு ருத்ர சொரூபமாயும், ஆதியாத்மீக, ஆதிதெய்விக, ஆதிபௌதிகமென்கிற மூன்று தாபங்களைப் போக்கடிக்கிறதாயுமுள்ள திருக்கூடலையாற்றூர் என்ற ஒரு தலமிருக்கிறது. அத்தலத்தைத் தரிசித்த மாத்திரத்தினால் அருக்கன் ஒளிமுன் இருள்போல் கோடி மஹா பாதகங்கள் நாசமடையும். அத்தலமானது ஸ்தூல சூக்ஷ்மகாரண சரீரங்களைப் போக்குவதாயும், சுகத்தைக் கொடுக்கிறதாயும், மகா புண்ணியத்தைத் தருகிறதாயும், சகல தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் சிரேஷ்டமாயும், சகல தேவர்களாலுமடைய அரிதாயுமுள்ளது. எவ்வித ஆத்மாக்களும் அத்தலத்தை ஒரு தடவை அடைந்தால் சம்சார சமுத்திரத்தினின்றும் முத்திக்கரையை அடைவார்கள். சிவபெருமானிடத்திலும்,



திருமாலிடத்தும் பக்தியுண்டாகும். புண்ணியம் வளரும். அத்தலத்தைத் தரிசித்தவனுடைய புண்ணியத்தைக் கூறுவதற்கு எவன் வல்லவனாவான்.

அத்தலத்தைத் தரிசிப்பவர்கள் பதினாயிரம் யாகஞ் செய்த பலனை அடைவார்கள். அத்தலத்திலிருக்கிற தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கிறவர்கள் மூன்று தாபத்தினின்று நீங்கி மலமற்றவராக விளங்குவார்கள். ஏனென்றால், சரஸ்வதி இலக்குமி, கங்கை ஆகிய மூவர்களும் பூவுலகில் நதிரூபத்தை யடைந்து முத்தியைக் கொடுக்கிறார்கள். அகாரம், உகாரம், மகாரம், பிந்து, எல்லாம் சேர்ந்து பிரணவமாக ஆவதுபோல் மூவர்களும் சேர்ந்து விளங்குகிறார்கள். ஆகையால் திருவேணி சங்கமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கிறவர்களுக்கு மறுபிறப்பு இல்லை. அத்தலத்திலிருக்கிற விருத்தவல்லபேஸ்வரரை ஒரு தடவை தியானித்த மானிடர்கள் சர்வபாவங்களினின்றும் விடுபட்டு, மாதிர் வம்சம், பிதிர் வம்சம் இருபத்தொரு தலைமுறையோடுஞ் சேர்ந்து கொண்டு சிவலோகத்தில் ஓர் ஈசுரகல்பகாலம் வாசம் பண்ணுவார்கள். அத்தல தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினவன் ஊமை, செவிடு, குருடு, குரூபம், வைதரணிநதியின் உபத்திரவம், நாயின் மூத்திரபானம் மாமிசபக்ஷணம், இவைகளையடைய மாட்டான். விருத்தவல்லபேசுரரைத் தியானித்த மானிடன், காய்ச்சின சூலம், காய்ச்சின கல், அமேத்தியம், முதலான மஹா துக்கங்களினின்றும் விடுபடுவான்.

புண்ணியத்தை விரும்புகிறவர்கள், திருவேணி சங்கம தீர்த்தத்தில் மூன்று நாள் ஸ்நானம் பண்ணி விருத்தவல்லபேசுரரை விதிப்பிரகாரம் பூசித்தால் மிக்க புண்ணியங்களை அடைந்து சிவலோகத்தை அடைகிறார்கள். தக்ஷிணப் பிரயாகையென்னும் பேருள்ள இத்தலத்தில் மகா மாத முழு

மையும் ஸ்நானஞ் செய்து சக்திக்குத் தகுந்த தானஞ் செய்து ஓமம் பண்ணி ஈஸ்வரனைப் பூசித்து, அந்தணர்களுக்குத் தனம், தான்யம், வஸ்திரம், ஆபரணம், பசு, பூமி, எள்ளு பொன் முதலான தானஞ் செய்து (ஜாகருகளுக) ஞானசக்தி, பராசக்தியோடு கூடிய நிருத்தவல்லபேசுரரை வேறு சிந்தனையில்லாமல் நித்தியம் சேவித்தவனுக்கு முத்தியானது எளிதிற் சித்தியாகும். அந்த மகா தீர்த்தல் சூரிய சந்திர கிரகண புண்ணிய காலத்தில் மூழ்கினவர்கள் பிரமஹத்தி முதலான பாவங்கள் ஒழியும்.

இன்னும் அத் தீர்த்தத்தில் எவன் மூழ்கிறானோ அவன் ஏழு ஜன்மங்களிற் செய்த பாவங்களுமகலும். மோகத்தினாலேயாவது, சிவபெருமான், திருமால், இவர்களுடைய, தானம், தவம், இவைகளை அபகரித்தவன் ஒருதடவை மூழ்குவானேயானால் அப்பாவத்தினின்றும் நீங்குவன். குரு, பிராமணன், ஸ்திரீ, தருமம் இவைகளின் திரவியத்தை மோகத்தினால் அபகரித்தவன், பிரமக் கொலைஞன், வழியைக் கெடுக்கிறவன், தனக்காகசமையல் செய்கிறவன், அதிகமாகச் சாப்பிடுகிறவன், வேதத்தை விற்பவன், இந்த ஐந்து பேர்களும் பிரமக் கொலைஞர்களே. தனம் முதலியவற்றைப் பிராமணனுக்குக் கொடுக்கிறேனென்றுப் பின் கொடாதவனும், ஒருவரின் சகலதருமங்களையும் அறிந்து அவரை அவமானஞ் செய்கிறவனும், தண்ணீர் குடிக்கும் பசுவை குடிக்காமற் செய்பவனும் பிரமக் கொலைஞர்களேயாவார்கள்.

மேற் கூறிய பிரமக் கொலைஞர்கள் ஒருவருஷகாலம் திருவேணி சங்கமத்தில் ஸ்நானஞ் செய்தால் பாவக் கூட்டத்தினின்றும் நீங்கி இன்புறுவார்கள். இன்னும் பிரம்மஹத்திக்குச் சமானமான எந்த பாவங்களாயினும் திரு



வேணி சங்கமத்தில் ஸ்நானஞ் செய்தால் அப்பாவங்களகலும். எவன் இறந்தவர்களுடைய எலும்பை இத்தீர்த்தத்தில் போடுகிறானோ அவ்வெலும்பையுடையவர்கள் மோக்ஷத்தை யடைவது திண்ணம்.

கிழங்கு, வேர், பழம், கஸ்தூரி, பட்டு, பால், சந்தனம் கற்பூரம், நெய், தேன், பாக்கு, இரும்பு, வெண்கலம், உருத்திராக்ஷம், பவளம், முத்து, வைடூரியம், இவைகளைத் திருடினவர்கள் பொன்னைத் திருடினவர்களுக் கொப்பாவார்கள். அவர்கள் திரிவேணிசங்கமத்தில் ஸ்நானம் பண்ணினால் அப்பாவங்கள் அவரை விட்டோடும்.

குருமனைவியைப் புணர்ந்த பாபிகளுக்குச் சமானமானவர்களாகிய, தங்கை, மருமகள், தூரஸ்திரீ, சகோதரனுடைய பத்தினி, நட்பினன் பத்தினி, கட்குடிக்கும் பெண்கள், அன்னியன் மனைவி, பிரியமில்லாத பெண்கள், இவர்களை மோகத்தினால் புணர்கிறவர்களும், இன்னும் இதர பாபிகளும் இத்தீர்த்தத்தில் மூழ்கின அளவில் முத்தியைப் பெறுவார்கள். யாசகம் பண்ணாமல், கிருதாசி, மேனகை முதலான தேவமாதர்களோடு போகஞ்செய்ய இச்சையுள்ள பிராமணர்கள் இத்திரிவேணிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் அவர்கட்கு அத்தெய்வமாதர் சம்போகம் கிடைக்கும்.

சூரிய நமஸ்காரம் செய்யாமலும், சிவ பூஜை செய்யாமலும், எள்ளு, பூமி, சுவர்ணம், நெல்லு, அரிசி, இவைகளைத் தானஞ் செய்யாமலும், சுவர்க்கத்தை அடைய விரும்புகிறவர்கள் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். உபவாசம், விரதம் இவைகளின்றியும், காயக் கிலேசமில்லாமலும், பலத்தை அடைய விரும்புகிற

வர்கள் இப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். இன்னும், புத்திர, பௌத்திரர்களை அடைய விரும்புகிறவர்கள், தனம், தானியம் முதலிய பொருள்களை இச்சிக்கிறவர்கள் ஞானத்தை அடைய விருப்பமுள்ளவர்கள், கீர்த்தியைப்பெற நினைப்பவர்கள், கன்னிகைக்கு வரன் வேண்டுமென்று இச்சையுடையவர்கள், இவையேயன்றி இதர பொருள்களை அடையும் எண்ணமுள்ளவர்களும், சுகத்தை விரும்புகிறவர்களும் இத்திரிவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்தால் நிருத்தவல்லபேசுரர் காமதேனுவேபோன்று வேண்டிய வேண்டியாங்கே கொடுத்தருளுவார்.

நான்கு வேதங்களையும் சாங்கமாக ஓதிய பலமும், அநேக யாகங்கள் செய்த பலமும் இத்திரிவேணியில் ஸ்நானஞ் செய்தால் சித்திக்கும், கூடலையாற்றூர் ஸ்தலத்தில், ஜெபம், ஓமம், அர்ச்சனை இவைகளைச் செய்தால் சிவபெருமான் திருவருளால் நிறைந்த பலனை அடையலாம்.

மேற்படி ஸ்தலத்தில் நிர்த்தனவல்லபேஸ்வர சன்னிதியில், ஒரு அந்தணனுக்கு போஜனம் செய்துவைத்தால் கோடி பிராமணபோஜனம் செய்துவைத்த பலனையளிக்கும். அத்தலத்தில் குளம் வெட்டுதல் முதலிய அறங்களைச் செய்தவர் அதற்குரிய பலமேயன்றி அனந்த பலனை அடைவார். இத்திரிவேணி சங்கமத்தில் பிதிருக்களைக் குறித்துப் பிண்டம்போட்டால் கயாதீர்த்தத்தில் எவ்வாறு திருப்தியடைவரோ அவ்வாறே பிதிர்கள் திருப்தியடைவர்.

திருவேணி சங்கமக்ஷேத்திரத்தில் ஓர் இரவு வசிப்பவன் சிவலோகத்தையும், சிவபிரானை அத்தீர்த்தத்தால் அபி



ஷேகஞ் செய்பவன் சுவர்க்கலோகத்தையும், அடைவார்கள். இந்த ஸ்தலத்தில் வாசஞ்செய்கிற சிவயோகிகளுக்கு அன்ன வஸ்திரங்களைக்கொடுத்து ஆதரித்தால் சகலதேவர்களும், பிதிர்களும், திருப்தி அடைவார்கள், முத்தியும் எளிதில் சித்திக்கும். ஆதலால் இத்தலத்திற்கு ஒப்பான தலமும், இத்திரிவேணி சங்கமதீர்த்தத்திற்குச் சமானமான தீர்த்தமும் மோக்ஷத்திற்குச் சாதகமாக கிடைப்பது மூவுலகிலுமரிது. என்று கூடலையாற்றூர் மான்மியத்தைக் காசியில் வியாசமுனிவர் சுகரிஷிக்குக் கூறியனவற்றை உங்களுக்கு முறைப்படிச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதமுனிவர் கூறத்தொடங்கினர்.

தக்ஷிணப்பிரயாகை ஸ்தலமகிமைச் சருக்கம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# அரியயன் அடிமுடி தேடு சருக்கம்.

மகா தவசிரேஷ்டர்களான சௌனகாதி முனிவர்களே! சகல சிவஸ்தலங்களுக்குள் உத்தமோத்தமாய், சிவபிரானுக்கு மிகப் பிரியமுள்ளதாய், சம்சார தாபத்தைப் போக்கடிப்பதாய் விசாலாக்ஷி சமேத விஸ்வேஸ்வரருக்கு இருப்பிடமாய், சித்தர் சாரணர், கந்தர்வர், இயக்கர், வித்தியாதரர், முதலியவர்களால் சேவிக்கப்பட்டதாய், அரியயன் முதலிய தேவர்களால் அன்புடன் வணங்கப்பட்டதாய், ஆனந்த நிதியாய், மிக்க அழகுடையதாய், கங்கைக்கரையில் விளங்குகிறதாய், தன்னிடத்தில் மரித்தவர்களுக்கு முத்தியை யளிப்பதாய் உள்ள காசி க்ஷேத்திரத்தில் ஏக மனத்துடன் மேன்மையான அப்பொருளைத் தியானஞ் செய்கிறவராய், எல்லா வுயிர்களிடத்தும் கருணையுள்ளவராய், பிரமப் பொருளை யறிந்தவராய் விளங்குகின்ற சுகமுனிவரைப் பார்ப்பதற்கு வியாசமகாமுனிவர் அங்குவந்தார்.

அப்பொழுது, வசிஷ்டர், வாமதேவர், விஸ்வாமித்திரர், ஜாபாலி, காசிபர், ககோளர், கண்ணுவர், கார்த்தியாயனர். மிருகண்டு, யாக்கியவர்க்கியர், இன்னும் சிவத்தியானிகளான அநேக முனிவர்களும் தத்தம் சிஷ்யப் பிரதிசிஷ்யர்களோடு சுகமுனிவரைத் தரிசிப்பதற்காக காசியம்பதிக்கு வந்தார்கள். வந்த முனிவர்களை சுகமுனிவர் நோக்கித் தியா



னத்தினின்றும் எழுந்திருந்து மிக மகிழ்ச்சியு
னார். வியாசமுனிவர் தன் குமாரராகிய சு
தழுவி, உச்சிமோந்து மடியில் வைத்துக்கொண்டு மிகுந்த அன்புடன் பற்பல பேசினார். மற்றை யெல்லா முனிவர்களும் குருபுத்திரராகிய சுகமுனிவரைத் தரிசித்து மன மகிழ்ச்சியுற்று ஆசனங்களி லமர்ந்தனர். அப்போது வேத வியாசர் தன் குமாரரான சுகமுனியை நோக்கி க்ஷேமம் விசாரித்து யாக்கியவர்க்கியர், வசிஷ்டர் முதலிய முனிவர்களுக்கு முகமன் கூறி ஒன்று கூறினார்.

பிரமஞ்ஞானிகளான முனிவர்களே! நீவிர் எல்லோரும் சுகமுள்ளவர்களா யிருக்கிறீர்களா! அக்கினி கோத்திரம் வேதபாராயணம், தவங்கள், இவைகளெல்லாம் விக்கினமின்றி நடைபெற்று வருகின்றனவா என்று வினவினார். அம்முனிவர்களெல்லோரும் வியாசரைவணங்கி அடியேங்கள் தேவரீரின் கிருபையால் சுகமுள்ளவர்களாயிருக்கிறோம் என்றும் தவசிரேஷ்டரான உமது புத்திரரையும், தேவரீரையும் தரிசித்து கிருதார்த்தர்களாகிவிட்டோம் என்றும் கூறினார்கள்.

இவ்வாறு கூறியவுடன் அம்முனிவர்களின் அபிப்பிராயத்தைத் தியானத்திலறிந்த சுகமுனிவர், வியாசகுருவைப்பார்த்து எந்தையே! பரம்பொருளை அடைவதற்கு உபாயமான, ஞானத்தை உபதேசிக்கவேண்டும். ஞான மூலமும், ஏகாக்ர சித்தமும், எவ்விதமுண்டாகும், சித்தசுத்தி எப்படிவரும், எல்லா உயிர்களும் கடக்கக் கூடாத சம்சாரக்கடலை எப்படி கடப்பார்கள் இவை எல்லாவற்றையும் சிந்தித்து விரிவாய்ச் சொல்லியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

இவற்றை யெல்லாங்கேட்ட வியாச முனிவர் தனது புத்திரராகிய சுக முனிவரை நோக்கி நீ எல்லாவற்றையும் அறிந்தவனாயினும் என்னுடைய அபிப்பிராயத்தையும் அறிய விரும்பினும் சொல்லுகிறேன். தவஞானிகளுடைய இருதய கமலத்தில் இருப்பதாயும், வாக்குக்கு எட்டாததாயும், விளங்குகின்ற பொருளை சொல்லுதற்கு நான் முகனாலும் முடியாத தாகிய அவ்வரிய பொருளை உன் பிரியம் போல் கூறுகிறேன் கேட்பாயாக.

தத்துவம் என்பது அப்பொருள் தான் வேறில்லை. சச்சிதானந்த ரூபமாயும், முடிவில்லாததாயும், நிஷ்களங்கமாயும், நிர்மலமாயும், வியாபகமாயும், அத்வைதமாயும், அழிவற்றதாயும், சாந்தமாயும் சத்த சத்தை பிரிக்க வல்லமை யுள்ளதாயும், நாதம், பிந்து, கலை இவைகளைக் கடந்ததாயும், சுயம்பிரகாசமாயும், நிர்த்தோஷமாயும், உள்ள பொருளே மெய்ப்பொருள். அப்பொருள் எல்லாவுயிர்களின் ஹிருதயத்திலும் விளங்குவதாம்.

அப்பொருளிலிருந்து எல்லா வுலகுந்தோன்றி விளங்கி அப்பொருளிலேயே ஒடுங்குகிறது. இரஜ்ஜுவில் ஸர்ப்ப பிராந்தியைப் போல் நாசமடைகிறது. சம்பந்த மற்ற பரம சிவனுக்கு முக்குண வடிவமான மாயை யென்கிற பராசக்தியும் மஹா காசம் முதலிய பூதங்களும் சதசத்து ரூபமாக உண்டாகின்றனவாம் சராசர வடிவமான உலக மனைத்தையும், தன் ஒளியினால் விளங்கும் படிச்செய்கிற பொருள் தான் பரம் பொருள்.

அப்பொருளே பிரம விஷ்ணு தேவர்களாக விளங்குவதாகும், என்று சகல அரிய பெரிய தவமுனிவர்களும் தத்தம் ஹிருதய கமலத்தில் தியானித்து வணங்குவார்கள்.



ஓ பிரமஞ்ஞான சிரேஷ்டரே! உலகத்தில் சிருஷ்டி சாமர்த்தியத்தை அறிந்தவனாயும், உபநிட தங்களால் ஸ்தாபிக்கப் பட்டதாயும் அகண்ட ரூபமாயும், நிர்மலமாயும், நித்தியமாயும், ஆகாசத்தை அதிக்கிரமித்ததாயும், மிகவும் பிரகாசமாயும், ஸர்வ வியாபியாயும், பஞ்சகலா வடிவமாயும், ஈசனாயும், பஞ்சகலைக்கு அப்பாலுள்ளதாயும், நிர்க்குணமாயும், சம்பந்த சூன்யமாயும், வியாபகமாயும், ஞானமயமாயும், விஷ்ணு ஸ்வரூபியாயும்; சுயம் பிரகாசமாயும், ஆனந்த மயமாயும் சாந்தமாம், ஆச்சர்ய காமாயும், பிரணவ வடிவமாயும், பிரம்ம ஸ்வரூபியாயும், நாதம், பிந்து, கலை வடிவாய் விளங்குவதாயும், அநாதியாயும், சர்வேஸ்வரனாயும், குகையில் வசிப்பதாயும், முடிவற்றதாயும், தத்பத லக்ஷியமாயிருக்கிற பொருளெதுவோ அதுதான் ஹிருதயத்திலிருக்கிற பிரம்மம் என்று அறியத்தக்கது.

அப்பொருளை யறிந்தவன் சகல பாவங்களினின்றும் விடு பட்டு யோகத்தை அடைவான். பேத மற்றவனாய், த்வேஷ மில்லாதவனாய் தன் சொரூபத்தை யடைந்து சிவனாக ஆய்விடுவான். ஆகாசம், காலம். எவ்வாறு பிறப்பு இறப்பு இல்லாததோ அதைபோல் பிறப்பிறப்பு இன்றி எல்லாவற்றிலும் பிரத்யக்ஷமாய் வியாபகமாய் விளங்கும் பிரமத்தை யறிந்தவன் பிராம்மணனென்று கூறப்படுவான். அப்பிரமத்தை யடையும் மார்க்கங்களைச் சொல்லுவேன் அன்புடன் கேளுங்கள்.

அந்தராத்மாவினால் குரு சிஸ்ருஷையினால் வேத வேதாந்தத்தில் நிச்சயத்தை யடைந்து, வேதத்திற் சொல்லிய கர்மங்களை யனுஷ்டித்து, ஏகாக்ர சித்தத்தை யடைகிறான். பிறகு சித்த சுத்தி யுண்டாகும். அச்சித்த சுத்தியால் வைராக்ய முற்று, குரு வுபதேசத்தை யடைகிறான். குரு

வினுபதேசத்தில் விசுவாசத்தினால் ஞானியாய் மோக்ஷத்தை யடைவான். கெட்ட சித்த முள்ளவன். சோமாஸ் கந்தர். முதலிய விக்கிரக பூஜைகளாலும், சிவ. விஷ்ணு முதலிய லிங்க பூஜைகளாலும். குளம் வெட்டுதல் முதலிய தருமங்களாலும். சித்த சுத்தியாய். ஏகாக்ர சித்தத்தை யடைகிறான். பரமசிவனுக்கு பிரியமுள்ள க்ஷேத்திரங்களில் வசித்தும். தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும். ஈஸ்வரனைப் பூஜித்தும். அந்தஸ்தல மான்மியத்தைக் கேட்டும். அந்த ஸ்தலத்தில் வசிக்கிற அந்தணர்களுக்கு தம் சக்திக்குத் தகுந்தபடி தானம் பண்ணி சம்ரக்ஷிப்பதனாலும். ஏகாக்ர சித்தத்தை அடைந்து அதனால் பரதத்துவத்தை அறிந்து முத்தனாகிறான் ஞானத்தினாலேயே அமிர்தனாக ஆகிறான். அப்படி யில்லாவிட்டால், ஆயிரம் பிறப்புகளை யடைந்த போதிலும் அப்பொருளை யடையமுடியாது. அப்பொருளை யடையும் உபாயத்திற்கு ஹேதுஞானத்தினா லடையப்படும் கர்மாவினாலும் பிரக்ஞையினாலும். அடைவான் என்று வேதங் கூறுகிறதென்று வேத வியாசமுனிவர் கூறினார்.

அதைக்கேட்ட சுகமுனிவர், சித்த சுத்தியை யுண்டு பண்ணுகிறதாயும், மோக்ஷ சாதனங்களை யுடையதாயும், சிவனுக்கு மிகப் பிரீதியாயுள்ளதாயும், யாகஞ் செய்தல், குளம் வெட்டுதல் முதலிய கர்மாக்களைச் செய்யத் தகாதவர்களுக்கும் முத்தியைத் தருவதாயுய், உள்ள க்ஷேத்திரங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ அவைகளின் மஹிமையை எனக்குச் சொல்லியருள வேண்டுமென்றும், காசி க்ஷேத்திரம் க்ஷேத்திரங்களுக்கெல்லாம் உத்தமமாயுள்ளது, பிரயாகையில் வாசஞ் செய்தால் அந்த க்ஷணத்தில் அது மூன்று ரணங்களைப்போக்கும், மாயாபட்டணம், துவாரகை, மதுரை, ஆகிய இவை முத்தியைக்கொடுக்கும், அயோத்யா



பட்டணம், காஞ்சிநகரம், மோக்ஷ சாதகமாயுள்ளது. இப்படியிருக்க, அவந்தி முதலிய ஐந்து பட்டணம் சிவபெருமானுக்கு எதற்காக, இவைகளெல்லாவற்றையும் என்னிடத்தில் அன்புடன் சொல்லியருளும் என்றும் வினவினார்.

இக்கேள்விகளைச் செவியுற்ற வியாசமகாமுனிவர், தனதருமை புத்திரரை விளித்து ஏ குழந்தாய், முத்தியைத் தருகிறதாயும், மங்களத்தைக் கொடுக்கிறதாயும், சிவபெருமானுக்குச் சந்தோஷகரமாயுமுள்ள இரகசியத்தைக் கேள்; ஒருவருக்குஞ் சொல்லக்கூடாது, மிகவும் ரக்ஷிக்கத் தகுந்தது, ஆத்மா ஒன்றாகையால் உனக்கும், எனக்கும் பேதமில்லை. ஆகையால் பாவத்தைப் போக்கடிக்கிற சரித்திர முழுமையும் சொல்லுகிறேன். முன்னொரு காலத்தில், பிர்மாவும், விஷ்ணுவும், ஒன்றுகூடி நான் உன்னைக் காட்டிலும் அதிகமென்று இருவர்களும் எண்ணிக்கொண்டு தேவர்களுக்கருகில் சண்டைசெய்து பின் ஈஸ்வரனை அடைந்து ஏ பகவானே? எங்களுக்குள் யார் மேலானவர் என்று தேவரீருடைய அபிப்பிராயத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். இவ்வார்த்தையைத் திருச்செவியேற்ற சிவபெருமான் புன் சிரிப்புடன், பிர்ம விஷ்ணுக்களை நோக்கி ஏ அரியயனே, நீங்கள் கர்வத்தினால் கிரிஷ்மருதுவில் மேக சப்தம்போல் விவாதம் செய்கிறது, சகல லோகத்திற்கும், கர்வம் இருந்தால், காமம் அகங்காரம், மோகம் எல்லாம் உண்டாகும், கர்வத்தினால் விந்தியமலைபோல் நாசத்தை அடைவன், ஆகையால் கர்வமுள்ள மனத்தை யடக்கிக் கேளுங்கள், பிரமனே நீ நம்முடைய முடியைப்பார்த்து வருவாயானால், அப்போது தேவர்களுக்கு எல்லாம் சிரேஷ்டமாயும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலானவனாகவும் ஆவாய் இஃதுண்மை, ஐயமில்லை.

விஷ்ணுவே நீ நம்முடைய பாதங்களைப் பார்த்து வருவா
யானால் தேவர்களுக்கும் பிர்மாவுக்கும் மேலானவனாக
ஆவாய் என்று திருவாய்மலர்ந்தருளி அக்னி ஸ்தம்பத்திற்
குச் சமானமான தேஜோமயமாய், திரிலோகங்களிலும், பத்
துத் திக்குக்களிலும், வியாபித்து ஆதியந்தமின்றி அவ்
வியக்தமாய் விளங்கினார்.

பிரமதேவர் அந்தத் தேஜோரூபியான சங்கரனைப்
பார்த்து ஆச்சர்யமடைந்து உலகமுழுதும் சஞ்சரித்து சிவ
பிரான் சிரசை அறிதற்கு முடியாதவராய், சிவபிரான் சன்
னிதியை யடைந்து யாது சொல்லுவேன், என்று கருதி
எவ்விதத்தானும், சிவபிரான் திருமுடியைப் பார்ப்பேன்
என்று தனக்குள் தீர்மானித்தவராய் மேலே சொல்லுவதற்
குத் தகுந்த அன்னப் பறவையின் வடிவத்தை யெடுத்து,
ஆகாயத்தில் பறந்து சென்றார், இவ்வாறு பதினாயிர யுகம்
வரையும் பறந்து சென்றும் திருமுடியைக் காணப்பெறாத
வராய் வருந்தி நிற்குஞ் சமயத்தில், அவாருகில் சிவபெரு
மானுடைய முடியினின்றும் வந்துகொண்டிருந்த தாழம்
பூவைப்பார்த்து ஏ தாழை மலரே! நீ எங்கிருந்து வருகிறாய்
உன் வரலாற்றைக் கூறுவாய், என்று வினவினார். அதனைக்
கேட்ட தாழை மலரானது, நான் சிவபெருமானுடைய
முடியினின்றும் பாதங்களைத் தரிசிக்கச் செல்லுகிறேன்,
நான் முடியினின்றும் புறப்பட்டின்றுவா ஒரு கோடியுகம்
ஆகும், ஆதலால் நீர் முடியைக்காண முடியாது. சத்திய
லோகம்போய்ச் சேரலாம் என்று கூறிற்று.

இதைக்கேட்ட பிரமதேவர் ஏ புஷ்ப சிரேஷ்டமான
தாழை மலரே, நீ சிவபிரான் சன்னிதியில் என்னிமித்தம்
நான் திருமுடியைக் கண்டதாகச் சொல்லவேண்டும், சாதுக்
கள் பரோபகாரத்திலேயே ஆசையுள்ளவர்க ளல்லவா.



பொய்யாயிருந்தாலும் பரோபகாரமா யிருத்தலால் உனக்
குச் சிறிதும் குற்றமாகாது என்று கூறினார். இதைக்கேட்ட
தாழைமலர் நான் சாதுக்களுக்கெதிரில் பொய் கூறுவது
உசிதமில்லை. அதிலும் சிவ சன்னிதியில் பொய் சொல்வது
மிகுந்த குற்றமாகும், என்று கூறிற்று. இதைக்கேட்ட
பிரமர் நீ என்னிமித்தம் இவ்வுபகாரத்தைச் செய்யாவிட்
டால் உனக்கெதிரிலேயே என் பிராணனை விடுவேன் நீ
அறிவாயாக என்று கூறினார். இதனை யுணர்ந்த தாழைமலர்
என்ன கஷ்டம், என்செய்வேன் என்று யோஜித்து தாங்கள்
சொல்லியவாறே கூறுவேனென்றுக் கூறிற்று.

உடனே, பிரமதேவர் சந்தோஷத்தை யடைந்து மிக
வும் வேகமாக ஆகாசத்தினின்றும் சிவபிரான் சன்னிதிக்
குத் தாழைமலருடனே வந்து சிவபிரானைக் நோக்கி, தேவரீ
ருடைய திருமுடியைக் கண்டேன், அங்கிருந்த தாழை மல
ரையும் கொண்டு வந்தேன் என்று கூறினார், சிவ பெருமான்
அதனைத் திருச் செவியேற்று, பிரமன் பொய் கூறுகிறான்,
எனத் திருவுளங்கொண்டு, பிரமனே நீ கூறுவது உண்மை
யாகுமா என்று கோபக் குறிக் காட்டி, தாழைமலரை
நோக்கி, ஏ தாழை மலரே நீ நமது சிரசினின்றும் வந்
தாயா, அல்லது நடுவில் பிரமனைச் சந்தித்து அவனுடன்
வந்தாயா உண்மையைக் கூறுவாய் என்று திருவாய் மலர,
இம்மொழிகளைக் கேட்டதும் அம்மலர் அஞ்சி அடியேன்
தேவரீருடைய திருமுடியினின்றும் புறப்பட்டு வெகு கால
மாய்க் கீழிறங்கி வருகையில், பிரம்மதேவரைச் சந்தித்து
அவருடன் இங்கு வந்தடைந்தேன் என்று மொழிந்தது.

அதன்மேல் எம்பெருமான் இவ்விருவருடைய வார்த்
தைகளையுங் கேட்டு, பிரமனை நோக்கி நீ நமது முன்னர்
பொய்ம்மொழி புகன்றதால் இவ்வுலகத்தில் உனக்கு ஆல

யம் பிரதிஷ்டை, பூஜை முதலியவை இல்லாமல் போகட்டும் என்றும், தாழைமலரைநோக்கி நீ நமது முன்னிலையில் பொய் கூற வந்ததனால் நாம் அணிவதற்கு இன்று முதல் உரியையல்லையாவாய். என்றும் சபித்தருளினார். அதனால் அன்று முதல் இன்று வரையும், பிரம்மப் பிரதிஷ்டையும், சிவபெருமானுக்குத் தாழைமலர் அணிவதும் இல்லாமற் போயிற்று.

திருமாலும் தேஜோமயமான சிவ பிரானுடைய திருவடிகளைக் காணும் பொருட்டு பன்றியுருக் கொண்டு தன் கோட்டினால் பூமியைத் தோண்டி பாதாளவுலகம் முற்றிலும் திரிந்தும் காணமுடியாமையால் சிவபெருமானைத் தியானித்தவராய் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு சிவ பிரான் சன்னிதியை யடைந்து வணங்கி ஓமஹாதேவரே தேவரீரது பாதங்களைக் காண முடியவில்லை, அடியேனுடைய கர்வம் நீங்கிவிட்டது. ஆட்கொண்டருள வேண்டும் என்று பிரார்த்திக்க சிவபெருமானும் திருவுளமிரங்கி நீ உண்மை யுரைத்தபடியால் உனக்கு உலகில் பிரதிஷ்டைமுதலானவை உண்டாகுக என்று வரங்கொடுத்தனுப்பித் தாம் அந்தர்த்தானம் அடைந்தருளினார்.

அரியயன் அடி முடிதேடு சருக்கம் முற்றிற்று.

Q23:38.2.11
N32

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

## திருவேணி சங்கம
# மஹிமைச் சருக்கம்.

பரமசிவன் தேஜோமயமான உருவத்தை யடைந்து, சகல திக்குக்களையும், உலகங்களையும், தன்னொளியினால் பிரகாசிக்கும்படிச் செய்த அப்பொழுதே அவருக்கு ஐந்து திருமுகங்கள் விளங்கின. அவற்றினின்றும் உத்தமமாகிய ஐந்து க்ஷேத்திரங்கள் உதித்தன. கிழக்கு முகமான தற்புருஷ முகத்தினின்று பூகைலாசமென்கிற க்ஷேத்திரமும், தேவர்களுக்கு மறியவரிதான தென் முகமாகிய அகோர முகத்தினின்று இராமேஸ்வர க்ஷேத்திரமும், மேற்கு முகமான சத்யோ ஜாதமுகத்தினின்று, அரிபிரமேந்திராதி தேவர்களாலர்ச்சிக்கப் பட்டதாயும், எல்லாவுயிர்கட்கும் எளிதில் முத்தியைக் கொடுப்பதாயும, உள்ளகோகர்ண க்ஷேத்திரமும், வடக்கு முகமான வாமதேவமுகத்தினின்று, எல்லாவுயிர்களுக்கும் மரணத்தில் முத்தியைத் தருவதாயும், விஸ்வேஸ்வரருக்கு பிரிய முள்ளதாயும், ஆனந்த கானமென்கிற திருநாமத்தையுடையதாயும், உள்ள காசிக்ஷேத்திரமும், உச்சிமுகமான ஈசான்ய முகத்தினின்று எல்லாவுயிர்கட்கும் எளிதில் முத்தியைத் தரக் கூடியதான தக்ஷிணப் பிரயாகை என்னும் க்ஷேத்திரமும் உதித்தனவாகும். இவ்வைந்து க்ஷேத்திரங்களும் ஆன்மாக்களுக்கு அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடியவைகள்.

அவ்வாறே, ஈஸ்வரசான்னித்தியமுள்ள அநேக க்ஷேத்திரங்கள் சிவபிரான் திருமேனி சம்பந்தமுள்ளவைகளாக இருக்கின்றன. அந்த க்ஷேத்திரங்களை உலகில் பிரமஞ்ஞானிகளான முனிவர்கள் மிகப் பரிசுத்தமுள்ள க்ஷேத்திரங்கள் என்று சொல்லுகிறார்கள் என்று வியாசமாக முனிவர் கூறினார். உடனே அவர் குமாரரான சுகமுனிவர் அவரை வணங்கி எந்தையே, தேவரீர் இப்பொழுது சொல்லிய க்ஷேத்திரங்கள், இது வரையில் யான் கேள்விப்பட்டதில்லை. அதிலும் தக்ஷிணப் பிரயாகை என்னும் க்ஷேத்திரத்தின் மஹிமையையான் ஒரு போதும் கேட்டதில்லை. அதன் மஹிமையும், பரமசிவத்தின் மஹிமையும், அந்தஸ்தலத்திற்குத் தக்ஷிணப் பிரயாகை என்றும் திருவேணி சங்கமம் என்றும் கூறும் நாமங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்றும், மூன்று நதிகள் எவை என்றும், அந்நதிகள் எவர்களுடைய பத்தினிகள் என்பதையும், அடியேனுக்கு அன்புடன் விரிவாய்ச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

உடனே வியாசமுனிவர் புன்னகைகொண்டு வ புத்திமானே! நன்றாகக் கேட்டாய் என்று மகிழ்ச்சியடைந்து. சகல முனிவருள்ளும் மேலான அறிவையுடையவன் ஆவாய், அன்புடன் நினைத்தவர்க்கு சம்சாரபந்தத்தை நீக்குவதாயும், சாஸ்திர சம்பந்தமுள்ளனவாயுமுள்ள மஹிமைகளைச் சொல்லுகிறேன் கேள். கங்கை யமுனை சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் ஒன்றுசேருமிடத்தைப் பிரயாகை என்று உலகத்தில் பிரசித்தியாய்ச் சொல்லுவார்கள். அதுபோல், தக்ஷிணங்கை, சரஸ்வதி, இலக்ஷ்மி என்னும் மூவரும் நதிரூபமாக அடைந்த இடம் தக்ஷிணப் பிரயாகை என்றும், திருவேணிசங்கமம் என்றும் உலகிற் கூறுவார்கள். அத்தலத்தின் மஹிமை வாக்குக்கு எட்டாததாயினும், சிவபிரானுக்கிரகத்தால் உனக்குச் சொல்லுகிறேன். தக்ஷிணகங்கை, சரஸ்வதி, இலக்ஷ்மி மூவர்களும் நதி ரூபமாய் அடைந்தார்கள்.



எவ்வாறெனில், முன்னொருகாலத்தில் ரகுவம்சத்திற் பிறந்த பகீரதன் என்னும் அரசனொருவன் இருந்தான். அவன், அநேக யாகங்களால் தேவர்களைத் திருப்திசெய்து தவஞ்செய்துகொண்டிருந்தான். முற்காலத்தில் கபில முனிவரால் சபிக்கப்பட்ட தன் பிதாமகர்களை சாபத்தினின்றும் விடுதலை செய்வதற்கு அதியுக்ரமான தவம்புரிந்து பிரமதேவரைச் சந்தோஷிப்பித்தான். அதனாற் பிரமதேவரிடமிருந்து கங்கையை அடைந்து, அக்கங்கையைத் தரிப்பதற்குப் பரமசிவனை வேண்டினான். அவனது வேண்டுகோளுக்கிரங்கி சிவபெருமான் அக்கங்கையைத் தமது திருமுடியில் ஏற்றார். அதன்பின்னர் சிவபெருமான் திருவருளால் அவரிடமிருந்து கங்கையைப்பெற்று அதன்பின்னே சென்றான். அதனால், அக்கங்கைக்கு பகீரதி என்னும் திருநாமம் உண்டாயிற்று. அதன்பிறகு அக்கங்காதேவியானவள் ஜன்னுமுனிவர் யாகசாலையை அழித்ததனால் அம்முனிவர் அதனைப் பானம்செய்தார். உடனே அம்முனிவரை பகீரதன் துதிசெய்துவேண்ட மனமகிழ்ச்சியடைந்த அச்சன்னுமுனிவர் கங்கையைவெளியேவிட்டார். மீளவும் பகீரதன் அக்கங்கையை அடைந்து அதன் ஜலத்தால் தனது பிதிரர்களுக்குத் தர்ப்பணஞ்செய்து அவர்களை சுவர்க்கம் அடைவித்துத் தானும் கீர்த்தியுடையவனானான், கங்காதேவியும் நதிகளுக்குள் மேன்மையுடையவளாகி. தன்னிடத்து ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு போக மோக்ஷங்களை கொடுப்பவளாய், எல்லா உலகிற்கும் இதத்தைச் செய்கிறவளாய், பரிசுத்தையாய், விளங்கினாள்.

அக்கங்காதேவியானவள் மீட்டுமொருசமயத்தில் சிவ
பிரானை வணங்கித் துதித்துத் தான் மிகவும் கீர்த்தியை
அடைய விரும்பினவளாய்ச் சொல்லுகிறார்கள். தேவ
தேவரே, உலககர்த்தாவே, பரமசிவனே, அடியேன் தெற்
குத் திக்கில் நதிரூபமாய்ச் சென்று என்மாட்டு ஸ்நானஞ்
செய்கிறவர்களுக்கு விரும்பிய வரங்களைக் கொடுக்க இச்
சிக்கிறேன். ஆகையால் தேவரீர் கிருபைகூர்ந்து கட்டளை
யிட்டருளும் என்று வேண்டி கங்கையைநோக்கி பரமசிவ
னும் நீ விரும்பியவாறே பூவுலகில் சஞ்சரிப்பதற்கு உத்த
ரவு தந்தோம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

கங்காதேவியும் பரமசிவனுடைய உத்தரவைப்பெற்ற
வுடன் உத்தரகங்கை, தக்ஷிணகங்கையென்றுந் திருநாமங்
களையடைய இச்சையுடையவளாய் சிவபிரானது திருமுடியி
னின்று விடப்பட்டவளாய், மிகச் சந்தோஷத்துடன் நதி
ரூபியாய்ப் பூமியை அடைந்தாள். அப்பொழுது பூவுல
கில் மணிமுத்தை என்னும் நாமத்துடன் கீர்த்தியையும்
பெற்றாள். அம்மணி முத்தாநதியானவள் எல்லா விருப்
பங்களையும் தருகிறவளாயும், பரிசுத்தையாயும் சகல பாவங்
களைக் களைபவளாயும், உலகத்தில் இஷ்டசித்திகளை ஈபவ
ளாயும், காமதேனுவிற்குச் சமானையாயும், விருத்தாசல
க்ஷேத்திர சமீபத்தில் சஞ்சரிக்கிறவளாயும், சித்தர், சார
ணர், கந்தர்வர், இயக்கர், வித்யாதரர் இவர்களால் பூஜிக்கப்
பட்டவளாயும், தன்னிரு பக்கங்களிலும் அநேக புண்ணிய
வனங்களையுடையவளாயும், மனோகரமுடையவளாயும், சிவ
பூஜை விஷ்ணுபூஜைகளில் விருப்புள்ளவர்களான முனிக்
கூட்டங்களையுடையவளாயும், தாமரைமலர்களில் வசிக்கும்
அம்சபக்ஷிகளின் கூட்டங்களால் பிரகாசிக்கப்பட்டவளா
யும், எல்லா நதிகளுக்கும் சிரேஷ்டையாயும் விளங்கி சமுத்
திர சங்கமமானாள்.



இவ்வாறுண்டான தக்ஷிணகங்கை யென்னும் மணி
முத்தாநதியின், வரலாற்றைக் கேட்ட பிரமபத்தினியாகிய
சரஸ்வதி, கங்கையினுடைய உருவத்தையும், பிரதாபங்களை
யும், நன்கறிந்து, மிகுந்த துக்கங்கொண்டவளாய், பிரம
தேவரை நமஸ்கரித்து, தனக்குங் கீர்த்தியுண்டாகுமாறு
கேட்டுக்கொண்டாள். பிரமதேவரும், மனமிரங்கி புன்முறு
வல்பூத்து ஆச்சரியமடைந்தார். சரஸ்வதியானவள் அதிக
கோபத்துடன் கங்கையின் மகிமைகளைத் தன்மனத்திற்
கொண்டவளால், தன்நாயகனையும் தன்னையும் நிந்தித்துக்
கொண்டு, என்நாயகரே தேவரீர்கிருபை எனக்கு இல்லை,
யான் மகிமையற்றவளானேன். கங்கைக்கு மகத்துவமும்,
எனக்கு இலகுத்தவமும், உண்டாயின. தேவரீரையான் மண
ந்துகொண்டதினால் சகல ஆன்மாக்களுக்குமெளியவளாயும்
சகலராலும் இழுக்கப்படுகிற வளாயும் ஜனங்களால் அடிக்
கடிவிருத்தி செய்யப்படுகிற வளாயு மானேன். இன்னமும்
என் சக்தியுள்ள புலவர்களுக்கு இலக்ஷ்மி யானவள்
(விமுகையாய்) பராமுக முள்ளவளாய் இருக்கிறதினால்
அவர்களுக்கு ஜன்மந்தோறும் தரித்திரமும், அதைரியமும்
உண்டாகின்றன. ஆகையால், தேவரீரைப் போன்றவர்
களுடைய பத்தினிகளான ஸ்திரீகளுக்கு மரணமே உத்தம
மாகும். கங்கையின் கௌரவத்தையும் இலக்ஷ்மியின்
கௌரவத்தையும் தேவரீர் சிந்தித்துப்பாரும், அவர்கள்
நல்ல நாயகரை யடைந்ததனால் தேவஸ்திரீகளுக்குள் மேலா
னவர்களாக விளங்குகிறார்கள்.

உமாதேவி யானவள் முருகக் கடவுளுக்குத் தாயாராகி,
சகல உலகங்களிலும், பிரசித்தி பெற்றவளா யிருக்கிறாள்.
அவளுடைய புத்திரனாகிய முருகக்கடவுள் தாரகா சூரனைச்
சங்கரித்து தேவசேனா பதியாய் விளங்குகிறார். அவ்வுமா

தேவியின் சக்களத்தியான மற்றொருத்தியும் தன் புருஷன் சிரசில் விளங்குகிறாள், இன்னு மக்கங்கையானவள் சகல நதிகளுக்குஞ் சிரேஷ்டையாயும், உலகங்களைப் பரிசுத்தம் பண்ணுகிறவளாயும், தன்னிஷ்டப் பிரகாரம் தலத்தில் ஏழு வித உருவத்தை யடைந்து, பூமியில் உத்தரகங்கை தக்ஷிண கங்கை என்று இரண்டு விதமான நாமங்களைப் பெற்றவளானாள்.

அவ்வாறே விஷ்ணு பத்தினியான இலக்ஷ்மியும் மன்மதனுக்கு அன்னையானாள், அவள் குமாரனாகிய மன்மதன் மூன்று உலகும் மோகிக்கும்படிச் செய்கிறான். என் கீர்த்தியோ மிகவும் நன்றாயிருக்கிறது. எம்முடைய பிள்ளைகளோ வெனின், முனிவர்களாகி விட்டார்கள். உலகத்தில் பர்த்தாவின் பெருமையினாற்றான் ஸ்திரீகளுக்கும் பெருமையுண்டாகும் என்னைப்போல் துரதிர்ஷ்டமான ஸ்திரீ ஒருவருமில்லை. இப்பொழுதே தேவரீர் முன்னிலையில் என் பிராணனை விடுகிறேன் தாங்கள் கிருபையினால் எனக்கு நதி ரூபம் கிடைக்க உத்தரவு கொடுத்தால் ஜீவிப்பேன். இல்லாவிடில் மரணத்தை யடைவேன் தேவரீர் அறிந்து கொள்ளும் என்று கூறினாள்.

சரஸ்வதியின் கோப வார்த்தைகளைக் கேட்ட பிரமதேவர், மதுரமொழிகளால், அவளைச் சமாதானஞ் செய்து கொண்டு அவளைப்பார்த்து என் பிரிய நாயகியே கொடுஞ் சொற்களைக் கூறி என்னை நிந்திப்பதால் உனக்கு வந்ததென்ன உனக்கு எது இஷ்டமோ அது என் வாக்கினாலுண்டாகட்டும் அது நிச்சயம், என்று பிரமதேவர் கூறியளவில், சரஸ்வதியானவள் மகிழ்ச்சியுற்று, நானும் நிர்மலமான நதி ரூபமாகத் தேவரீர் உத்தரவு கொடுத்தருளும் என்று பிரார்த்தித்தாள். அவ்வாறே பிரம தேவர் நீ



ரூபத்தை அடைவாய், என்றும், கங்கைக்குச் சமானமாவாய் என்றும், இந்தப் பூவுலகில் உத்தமியாய் விளங்குவாய் என்றும் கட்டளை யிட்டருளினார். உடனே சரஸ்வதியானவள் பிரமதேவரை வணங்கி, ஒரு அம்சத்தினால் பூமியை யடைந்து விசித்திரகிரி என்னும் மலையின் சிகரத்தினின்று நதிரூபமாய்க் கிளம்பினாள்.

கின்னரர், வித்யாதரர் அப்ஸரஸ், இவர்களால் துதிக்கப்பட்டு அநேக ஜல ஜந்துக்களுடனும், வெகு புஷ்பங்களோடும் அதிவேகமாய்ச் சென்று, கார்த்தியாயனர் என்ற முனிவருடைய ஆசிரமத்தை யடைந்து அவரது யாகசாலையை அழித்து அதிக கர்வத்துடன் மோகத்தை யடைந்து நான் கன்னிகை யென்று, அதிக நுரையுடன் சந்தேகமன்னியில் போனாள். அந்த நதி வேகத்தினால், சிருக்கு சிருவங்களுடன் மூழ்கிப்போன ருத்விக்களைப் பார்த்து அம்முனிவர், கோபங்கொண்டு, கர்வங்கொண்ட சரஸ்வதியே, நீ என் யாகசாலையை நாசஞ்செய்தாயல்லவா, ஆகையால் நீ ஜலரூப மற்றவளாக ஆவாய் என்று சபித்தார். சபித்தவுடன் சரஸ்வதி அம்முனிவர் சாபாக்னியினால் ஜலமற்றவளாய் வெட்கத்தினால் தலைகுனிந்து மானிட சரீரத்தையடைந்து முனிவரை மிகவுந் தோத்திரம் செய்தாள், சாந்தரான அம்முனிவர் பிர்ம்ம பத்தினியென்று கருணைகொண்டு சரஸ்வதியே, இலக்ஷ்மிதேவியானவள் பூவுலகில் நதிரூபத்தை யடைந்து, தன் ஒரு அம்சத்தினால் பிரத்யக்ஷமாய் தக்ஷிணகங்கை என்னும் மணிமுத்தா நதியோடு எப்போது கூடுகிறாளோ, அப்போது, நீயும் ஜலரூபமாய் அவ்விருவர்களோடுங் கூடி, மகிழ்ச்சியை யடைவாய் என்று கூறி, தனது எஞ்சிய யாகத்தை முடித்து மகிழ்ச்சியடைந்தார்.

சரஸ்வதியும் அவ்விடத்திலேயே சாபவிமோசனத்தை எதிர் பார்த்துக்கொண்டு பூமியில் தன் பர்த்தாவையும் தீனர்களான பிள்ளைகளையும் நினைத்தாள். அப்பொழுது சனகாதிகளான பிள்ளைகள் கார்த்தியாயன முனிவரால் சபிக்கப்பட்ட தாயாரைப்பார்த்து மிகவும் துக்கத்தையடைந்து சாபவிமோசனத்தைக் குறித்து யோசித்து சந்தோஷத்துடன், விஷ்ணுவைச் சரணமடைந்து அடிக்கடி நமஸ்கரித்து அஞ்சலி பந்தனம்செய்து கமலக்கண்ணனாராயும், உலக ரக்ஷகராயும் வேத வேதாந்தங்களால் அறியப்பட்டவராயும், பூவுலகத்திற்கு நாதராயும், பூமாலையை மார்பிலணிந்தவராயும், கருணைக்கடலாயும். கௌஸ்துப ரத்தினஹாரம் அணிந்தவராயும், சங்கு சக்ரம் முதலிய பஞ்சாயுதங்களைத் தரித்தவராயும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்குக் காரணமாகிய மாயா சக்தியோடு கூடினவராயும், முக்தியைத்தரும் பாதகமலங்களோடு கூடினவராயும், குணரகிதராயும், சத்தியம், சாந்தம், முதலிய நற்குணங்களை யுடையவராயும், திருப்பாற்கடல், முனிவர்களின் ஹிருதயம், வைகுண்டம், தாமலர, ஆலிலை ஆகிய இவைகளில் வசிப்பவராயும், தேவர்களைக் காப்பாற்றும்பொருட்டு மத்ஸியம் முதலிய அவதாரங்களை யடைந்து அசுரர்களை வென்று தேவர்களுக்கின்பங் கொடுத்தவராயும், உள்ள. உம்மைத் துதிக்கிறோம் என்று சனகாதி முனிவர்கள் கூறியவுடன் மஹா விஷ்ணுவானவர் அந்நால்வரையும் பார்த்து ஏ சனகாதி முனிவர்களே; உங்களுக்கு எது இஷ்டமோ அந்த வரங்களைக் கேளுங்கள் பகவத் பக்தர்களுக்கு கொடுக்கத் தகாததாயினும் கொடுக்க வேண்டியதுதான் என்று கூறினர்.

இதனைக்கேட்ட சனகாதி முனிவர்கள் ஏ லக்ஷ்மீ நாயகரான தாமரைக் கண்ணனே, சரஸ்வதியானவள் பிரம்ம



தேவருடைய உத்தரவினால் பூமியில் நதிரூபத்தை அடைந்து கார்த்தியாயனரால் சபிக்கப்பட்டு வெகுவித வசனங்களால் சாபவிமோசனம் பண்ணவேணுமென்று மகரிஷியை யாசித்தாள், அந்த சரஸ்வதியின் வார்த்தையைக்கேட்ட மஹரிஷியானவர் ஏ சரஸ்வதீ இலக்ஷ்மியானவள், நதிரூபியாய் பார்வதியோடு சேர்ந்து எப்பொழுது வருவாளோ அப்பொழுது நீ சாப விமோசனத்தை யடைவாய் என்று கூறினார். ஆதலால் தேவரீர் இலக்ஷ்மியை நதிரூபமாக ஆகும்படி உத்தரவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மஹா விஷ்ணுவானவர் சிறிதுநேரம் தியானம்பண்ணி சனகாதி முனிவர்களிடத்திலுள்ள அன்பின் மிகுதியால், நீங்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டுமென்று கூறி, உடனே இலக்ஷ்மியை விளித்து ஏ லக்ஷ்மீ நீ சரஸ்வதியின் சாபவிமோசனத்தின் பொருட்டு நதிரூபத்தை யடைந்து என் பாகத்தினின்றும் ஒரு அம்சத்தினால் சஞ்சாரஞ் செய்வாய் என்று உத்தரவிட்டார்.

இவ்வுத்தரவைக் கேட்ட இலக்ஷ்மியானவள் நல்லதென்று பர்த்தாவின் பாதங்களில் வணங்கி ஒரு அம்சத்தினால் பூமியை அடைந்து சுதர்சனமென்கிற மலையினுடைய சிகரத்தினின்று சந்தோஷத்துடன் விஷ்ணுவை நமஸ்கரித்து இருதயத்தில் நதிரூபத்தைத் தியானித்தாள். உடனே இலக்ஷ்மியானவள் வெண்ணிறமான ஜலத்துடன் கூட விஷ்ணு சக்திபோல் விருதி திக்கை சுத்திசெய்து பிரவாஹத்தை அடைந்து ஸ்ரீ முஷ்ணத்தில் விளங்குகிற ஆதி வாரகத்தினுடைய பாத மூலத்தை அடைந்து வெண்ணிறமான ஜலத்துடன் விளங்கினாள். ஆதி வாரகத்தினுடைய

சரீர காந்தியை அடைந்ததினால் வெள்ளாறு என்று வித்வான்களால் கூறப்படுகிறது.

மேற்கூறிய வெள்ளாறானது பூவுலகில் சகல நதிகளுக்கு சிரேஷ்டமாயும், விரஜாநதிபோல் மங்களகரமாயும் மீன்கள், ஆமைகள், சக்ரவாக பக்ஷிகள், தாமரை புஷ்பங்கள், இவைகளோடு கூடினதாயும், இருகரைகளிலும் அசோகம் மந்தாரம், புன்னை, தென்னை, அடம்பு, பிலா, பேரீச்சை முதலிய அனேக விருக்ஷங்களை யுடையதாயும், சித்தர், கந்தர்வரிஷிகள் முதலியவர்களால் சேவிக்கப் பட்டதாயும், அநேக புண்ணிய ஸ்தலங்களோடு கூடினதாயும், ஸ்நானஞ் செய்கிறவர்களுக்கு முக்தியைக் கொடுக்கிறதாயும், ஓரிடத்தில் கம்பீரமான சப்தத்துடன் பிரவகிக்கிறதாயும், ஓரிடத்தில் மணல் முட்டுடன் கல்கார புஷ்பங்களாகிற முகமுடையவளாகவும், ஓரிடத்தில், அலைகளாகிற கைகளை யுடையவளாகவும், ஓரிடத்தில் தாமரைகளாகிற கண்களை யுடையவளாகவும், நீலோற்பலமாகிற கர்ணபூஷணங்களையுடையவகவும், ஓரிடத்தில் பாசிக் கொத்தாகிற கேசத்தை யுடையவளாகவும், புஷ்பத்தின் வாசனையில் பூசப்பட்டவளாயும், நுரை கூட்டமாகிற மந்த ஹாசத்துடன் கூடினவளாயும், ஜல பூர்ணியாயும், வனத்தில் சஞ்சரிக்கிறவளாயும், புதிதாகக் கல்யாணஞ் செய்த ஸ்திரியானவள் தன் பர்த்தா சமீபத்தை விரும்பினவள்போல் தன் சகியாகிற சரஸ்வதியை தேடிக்கொண்டு வனபூமியில் சஞ்சரித்தாள்.

அக்காலத்தில் ஸ்வேத நதியானவள் அதிக ஜலத்துடன் வெகுகாலந்தேடி தன்னிடம் வந்த சகியைப்போல் மணிமுத்தா நதியைப்பார்த்து அளவில்லா சந்தோஷ மடைந்தாள். மணிமுத்தா நதியும் ஸ்வேதநதியைக் கூப்பிட்டு ஆதரவோடு அலைகளாகிற கைகளால் தழுவிக்கொண்டு ஜலத்



துடன் ஒன்று சேர்ந்தாள். வெகு காலங்கழித்து வந்த பிருவடையான சகியை கைகளால் கட்டிக்கொள்வது போல் வெள்ளாறு மணிமுத்தா நதியிரண்டும் சகோதரிபோல் ஒன்றாய்க் கூடிக்கொண்டார்கள் அவ்வாறே சரஸ்வதியும் ரிஷியினுடைய சாபத்தினின்றும் விடுபட்டு பிரவாகத் துடனே ரிஷிகளால் சேவிக்கப்பட்டு அந்த இரண்டு நதிகளுடனே சேர்ந்து கொண்டாள். அந்த மூவர்களும் எவ்விடத்தில் சேர்ந்து கொண்டார்களோ அந்த ஸ்தலம், மனிதர்களுக்கு முக்தியைத் தருவதான தக்ஷிணப் பிரயாகை என்று பெயர் பெற்றது. கங்கையானது எவ்வாறு மூன்று விதமாக விளங்குகிறதோ அஃதேபோல் இந்த மஹாநதியும், வெள்ளாறு இடையாகவும், சரஸ்வதி பிங்கலை யாகவும், மணிமுத்தை சுழுமுனையாகவும் இந்த மூன்றும் சேர்ந்ததும் கும்பகம் என்று கூறுவது போல் இம்மூன்று நதிகளுங் கூடிய இடம் கும்பகஸ்தானம் எனப் பெயர் பெறும். ஆகையால் இந்த ஸ்தலத்திற்குச் சமானமான ஸ்தலம் உண்டானதுமில்லை, உண்டாகப் போகிறதுமில்லை.

இந்தஸ்தலத்தில் முன்னொருகாலத்தில் பிரமதேவன் பரமசிவன் ஆக்ஞையால் அதிக கோரமான தபஸ் செய்து வெகுயாகங்களைச் செய்து, சகல தேவர்களுடன் பரமசிவனுடைய ஆனந்த நடன தர்சனம் செய்தார் என்று வியாசர் கூறிய மொழிகளை நன்குணர்ந்த சுகமுனிவர் மிகவும் சந்தோஷத்துடன் ஆச்சர்யமடைந்தார். என்று சொல்லி அவரைத் தியானித்து அவர் அனுக்கிரகத்தால் உங்களுக்குச் சொன்னேன், இன்னும் என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்று மகரிஷிகளை சூதர் வினவினர்.

திருவேணிசங்கம மஹிமைச் சருக்கம்
முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பிரமன் வரம்பெறு சருக்கம்.

நைமிசாரண்ய வாசிகளான மஹாரிஷிகள் சூதமுனிவரைப் பார்த்து சொல்லுகிறார்கள். சகலதத்துவத்தையும் அறிந்தவராயும், சகல உலகங்களை அநுக்கிரகஞ் செய்ய ஆசையுள்ளவராயுமிருக்கிற ஏ சூதமகா முனிவரே, மிகவும், ஆனந்தகரமாயும், பரிசுத்தமாயுமுள்ள தக்ஷிணப் பிரயாகை என்னும் க்ஷேத்திரத்தின் நல்ல கதையைக் கேட்டு போதும் என்று திருப்தி உண்டாகவில்லை. அவ்விடத்தில் மூர்த்தி பிர்மதேவர் அதிகோரமான தபஞ் செய்து சகல தேவர்களோடு பரமசிவனது ஆனந்த நிர்த்தனத்தை எப்படித் தரிசனம் செய்தார், அதை எங்களுக்கு விரிவாகச் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

உடனே சூதமகா முனிவரானவர் விஸ்வேஸ்வர க்ஷேத்திரமாகிய காசியில் பிர்மஞ் ஞானியான சுகமுனிவருக்கு வியாசர் எது கூறினாரோ அதை உங்களுக்குச் சொல்லுகிறேன் அஃது எவ்வாறெனில், சுக முனிவர் வியாசரைப் பார்த்து ஏ வியாச குருவே என்னால் பரிசுத்தமான திருவேணிசங்கமோற்பத்தி கேட்கப் பட்டது. தேவரீர் முகாரவிந்த மதுபானஞ் செய்ததினால் போது மென்று திருப்தி உண்டாக வில்லை. நீர் பிரத்யக்ஷ சிவனுக்குத் துல்யரல்லவா, பிரம்மதேவர் அவ்விடத்தில் தபஸ்செய்து பரமசிவனுடைய ஆனந்த நடனத்தைத் தரிசித்து எவ்வாறு இருதார்த்தரானார் என்று கேட்டார்.



கேட்டவுடன் வியாசமஹா முனிவர் ஏ சுகமுனியே, புண்ணியமாயும், மனோரம்யமாயும், ஒரு தடவை கேட்டதினால் முத்தியைத் தருகிறதாயும் உள்ள பிரம்மதேவர் கதையைச் சொல்லுகிறேன் கேள், எனச் சொல்லத் தொடங்கினார்.

ரமணீயமான கைலாச சிகரத்தில் பார்வதி, விஷ்ணு இவர்களால் பிரார்த்திக்கப் பட்டு, பரமசிவன், இவர்களுக்கு அருகில் ஆனந்த நடனஞ் செய்தார். அதைக் கேட்டு சஞ்சல சகல உலகங்களுக்கும் பாட்டனாகிய பிரம்மதேவன் சித்தனாய், விஷ்ணுவும், பார்வதியும், ஆனந்த நடனதரிசனத்தால் இருதார்த்தர்களென்றும் நான் வியர்த்தகனாக ஆகிவிட்டேன், என்னுடைய ஜன்மமும் வியர்த்தம், என்னுடைய ஜனங்களும் வியர்த்தமான ஆயுசை யுடையவர்கள். என்று மனசில் யோசித்து துக்கத்தை யடைந்து நானும் ஆனந்த நடனத்தைப் பார்ப்பதற்கு எம்பெருமானுடைய கைலையங்கிரியை அடைந்து ஈஸ்வரனைப் பிராத்திக்கிறேன் என்று மனசில் நிச்சயஞ் செய்து அன்னவாகனத்திலேறிக் கொண்டு சனகாதிரிஷிக் கூட்டங்களால் சூழப்பட்டு தேவ கந்தர்வ கூட்டங்களால் துதி செய்யப்பட்டு, சந்தோஷத்துடன் ஆகாயமார்க்கமாய்ப் போய், விளையாட்டாக பாதி ஜாமத்துக்குள் வெகு தூரத்திலுள்ள கைலாசகிரியைப் பார்த்து ஆச்சர்ய முற்றவராய் நானாவித தாதுக்களோடு கூடினதாயும், அநேகவிதமான இரத்தினங்களால் பிரகாசிக்கிறதாயும், அநேக பர்வதங்களோடும், அநேக கிழங்குகள், பழங்கள், தீர்த்தங்களோடும், பலவித புஷ்பங்களோடும், பலமிருகங்களோடும், பக்ஷிக்கூட்டங்களோடும், கூடினதாயும் அநேக, தேவர்கள், யக்ஷர்கள், ராக்ஷகர்கள், கின்னரர், அப்ஸரஸ்கள், சித்தர்கள், சாரணர்கள், இவர்களால்

சேவிக்கப் பட்டதாயும், சர்வாங்கங்களில் விபூதி உத்தூளனஞ் செய்து திரிபுண்டரம் தரித்தவர்களாயும், ருத்திராக்ஷம் தரித்தவர்களாயும், தருப்பை, மரவுரி, சடை இவைகளைத் தரித்தவர்களாயும் இயமம் முதலிய எட்டு அங்கங்களில் விருப்புடையவர்களாயும, சிவத் தியாணம் பண்ணுகிறவர்களாயும், சிவ பூசை செய்கிறவர்களாயும், சிவனே பிரம்மம் என்று சொல்லுகிறவர்களாயும், ஆகாரமில்லாதவர்களாயும், மாசந்தோறும் ஆகாரம் செய்பவர்களாயும், இந்திரியங்களைச் செயித்தவர்களாயும், ஜலத்தைச் சாப்பிடுகிறவர்களாயும், வாயுவை உட்கொள்ளுகிறவர்களாயும், பிராணாயாமஞ் செய்கிறவர்களையும், பரமசிவனுடைய திருவடிகளில் மனத்தைச் செலுத்தினவர்களாயும், கோடி சிஷ்யர்களோடு கூடினவர்களாயு மிருக்கிற, சனற்குமாரர், ஜாபாலி, வாமதேவர், முதலிய இருடிகளால், தினந்தோறும், இரவும் பகலும், சேவிக்கப் பட்டதாயும், சந்திரகாந்தம், சூரியகாந்தம், மின்னற்கொடி, இவைகளால் இரவும் பகலும் பிரகாசிக்கிறதாயுமுள்ள கைலயங்கிரியைப் பார்த்து மனத்தினால் நமஸ்காரஞ் செய்தார்.

பிறகு பிரம்மதேவர் காலினால் அம்சத்தை நிறுத்தி அதினின்றுமிறங்கி மலைக்குள் பிரவேசித்து, மலையைப் பார்த்து. கிருதார்த்தனாகிவிட்டேன் என்றெண்ணினார். அந்த கைலயங்கிரியில் இரத்தின மயமான ஒன்பது பிரகாரங்களோடும், வைடூர்யமயமான கோபுரங்களோடும், எட்டு வாசற்படிகளோடும், பலவித சித்திரமமைந்த சுவர்களோடும், முத்து பவளம் ஆகிய இவைகளாற் செய்யப்பட்ட மாலைக் கொத்துகளோடும், சந்திரகாந்தமயமான தோரணங்களோடும், இந்திரநீல கற்சுவரோடும், வெள்ளி அங்கணங்களோடும், இரத்தின ஸ்தம்பம்கூடின மண்டபங்களோடும்,



சொர்ணமயமான தொம்பைகளோடும் மாணிக்கமயமான கொடுங்கைகளோடும், வெண்மேகத்திற்கொப்பான அனேக மாடிகளோடு கூடினதாயும், கத்தி, தோமரம், வில், முதலிய ஆயுதங்களைத் தரித்த அநேக காவற்காரர்களால் இரவும் பகலும், காப்பாற்றப்பட்டதாயும், பகலில் பரமசிவன் உத்தரவினால் சூரியனொளியால் பிரகாசிக்கிறதாயும், இரவில், இரத்தின தீபங்களாலும், ஜோதிக்கொடிகளாலும் பிரகாசிக்கிறதாயும், சந்தனம், அகில், பச்சைகற்பூரம் இவைகளால் பூசப்பட்டதாயும், அநேக அஸ்மானகிரியால் சோபிக்கப்பட்டதாயும், வித்தியாதரன், அப்ஸரஸுகள், தும்புரு முதலிய அனேக பாடகர்களுடைய வீணைவாத்தியங்களால் சோபிக்கப்பட்டதாயும், மணிபத்திரன் முதலிய பிரதமகணங்களாலும், நந்தி, பிருங்கி, முருகர், கணபதி முதலிய துவாரபாலகர்களாலும், இன்னும் முக்கியகணங்களாலும், சூழப்பட்டதாயும், சகல லக்ஷணங்களோடு கூடிய கைலயங்கிரியில், கோடி சூரியனுக்குச் சமானமான ஒளி பொருந்திய இரத்தினத்தாலான விமானமத்தியில், கோடி சந்திரனைப்போல் சீதளமாயும், மாணிக்கமயமான அழகிய சிம்மாசனத்தில் நிர்மலமான பரமசிவனது ஒளியையும் பார்த்து ஆச்சர்ய மடைந்தார்.

பிறகு, பரமசிவனுடைய உத்தரவினால், உலகங்களைச் சந்தோஷிக்கச் செய்கிறவரான நந்திகேஸ்வரரோடு உள்ளே போய், பரமசிவனுடைய சமீபத்தில் வணக்கத்துடன் அடைந்து, மிக்க மேன்மையுள்ள சபையையும், தேவாதிதேவராயும், ஈசனாயும் உள்ள உமாபதியைப் பார்த்து ஆச்சர்யமுற்றார்.

சர்வாங்கங்களிலும் விபூதிபூசி, நெற்றியில் திரிபுண்டரமணிந்தவராயும், நீலகண்டராயும், முக்கண்ணராயும் நித்திய

ராயும், உபநிஷத்துக்களுக்கு விஷயராயும், சந்திரன், கங்கை, சடை, சர்ப்பம், இவைகளை முடியின்கண் தரித்தவராயும், கோடி சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்தவராயும், புலித்தோலை ஆடையாக அணிந்தவராயும், யானைத்தோலை உத்தரீயமாக உடையவராயும், நான்கு கைகளிலும், சக்தி, சூலம், முதலிய சிரேஷ்டமான ஆயுதங்களை அணிந்தவராயும், வாசுகி, தக்ஷகர்களை இரண்டு குண்டலமாக வுடையவராயும், பார்வதியினால் ஆலிங்கனஞ் செய்யப்பட்ட இடது பாகத்தையுடையவராயும், இந்திரர் முதலிய திக்குப்பாலர்களாலும், யக்ஷர், ராக்ஷஸர்கள்; பன்னகர், சித்தர், சாரணர், கந்தர்வர், அப்ஸரஸுகள் இவர்களால் இரவும் பகலும் சேவிக்கப்பட்டவராயும், நித்தியானந்த சுகரூபியாயும், நித்திய கல்யாணத்தைக் கொடுக்கிறவராயும், சகல உலகத்துக்கும் நாதனுமுள்ள மஹேஸ்வரரைப் பார்த்து பிரமதேவரானவர் தண்டாகாரமாய் நமஸ்கரித்து ஆனந்தத்தினால் மலர்ந்த கண்களுடன்கூடி, ஆனந்த பாஷ்பங்களால் இமைகள் தடுக்கப்பட்டு, கத்கதசுரத்தோடு அஞ்சலிசெய்து சத்தியாதிலக்ஷணமுள்ளவராயும் பரப்பிரம்ம சொரூபியாயும் வாக்குக்கு எட்டாதவராயுமிருக்கிற பரமசிவனைத் துதி செய்ய ஆரம்பித்தார்.

தேவர்களுக்கு தேவராயும் பக்தர்களுக்கு ஆனந்தத்தைச் செய்கிறவராயும் சச்சிதானந்த ரூபராயுமிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

நித்தியசுத்தராயும் சாந்தராயும் நித்தியராயும் ம[illegible] சொரூபராயும் சந்திரன் சூரியன் அக்கினி இவர்களை [illegible]திரமாக உடையவராயும் சுகம்தருகிறவராயுமிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.



[illegible]கைலயங்கிரிக்கு ஈசராயும் சின்முத்திரையுள்ள கையையுடையவராயும் பிறப்பற்றவராயும் இறப்பற்றவராயும் மங்களகரமாயு மிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

பரஹம்ஸசொரூபியாயும் பக்தர்களுடைய உபத்திரவத்தை போக்கடிக்கிறவராயும் பராபரை என்ற சக்திகளோடு கூடினவராயும் அந்த சக்தியினால் விடப்பட்ட தேஜோரூபியாயுமுள்ள தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

பரிபூரணராயும் பரமேஸ்வரராயும் ஆலமரத்தடியில் வசிக்கிறவராயும் உக்கிரவராயும் உக்கிரஸ்வரூபராயும் வேதங்களால் பூஜிக்கப்பட்டவராயுமிருக்கிற தேவரீரின் பொருட்டு நமஸ்க்காரம்.

சங்கமற்றவராயும் கைலாசநாதராயும் மலமற்றவராயும் ஆத்மஸ்வரூபராயும் பேதமல்லாதவராயும் ஆத்மானந்தத்தை தருகிறவராயு மிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

புருஷராயும் பிராஜ்ஞராயும் முப்புரத்தை தகித்தவராயும் இருதயத்தில் இருக்கிறவராயும் தத்துவரூபியாயு மிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

ஜகத்ரூபியாயும் உலகத்தை அதிக்கிரமித்தவராயும் வியாபகராயும் ஆகாசம் முதலிய மகா தத்துவங்களுக்கு காரணராயுமிருக்கிற தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

அழிவில்லாதவராயும், அளக்கமுடியாதவராயும் பிறப்பு இறப்பு இல்லாதவராயும் அகண்ட ஸ்வரூபராயும் முடிவில்லாதவராயு மிருக்கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

ரோகத்தை போக்கடிக்கிறவராயும் ருத்ரரூபியாயும் [illegible]ம்மாவினுடைய பீதியை போக்கடித்தவராயும் நல்ல சித்தமுள்ளவராயும் தன்னடியார்களுக்கு மங்களத்தை

கொடுக்கிறவராயும் மனத்தை அதிக்கிரமத்தவராயு மிருக்
கிற தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

சகல பக்தர்களுக்கு இஷ்டகாமத்தை கொடுக்கிரவ
ரான வாமதேவரீரின்பொருட்டு நமஸ்காரப்.

ஈசானராயும், அகோரராயும், சத்யோஜாதராயும்,
அஷ்டமூர்த்தியாயும், சகலரால் சேவிக்கத்தகுந்தவராயும்,
தேவர்களுக்குத் தேவராயும், விருஷபத்தில் எழுந்தருளியவ
ராயும், உள்ள தயாசமுத்தரரே, உமாகாந்தனே, திரிபுரங்
களை எரித்த சிவனே, விஷ்ணுவால் பூசிக்கப்பெற்றவனே
தேவரீரின்பொருட்டு நமஸ்காரம்.

என்று இவ்விதமாக பிரமன் பரமசிவனை யாசித்துக்
கொண்டு அடிக்கடி நமஸ்காரஞ்செய்து ஒன்றுஞ் சொல்லா
மல் நின்றார்.

அதன்பிறகு சத்தியாதி இலக்ஷணமுள்ள பரம சிவன்
பிரசன்னராயிமதுரமாயும் கம்பீரமாயுமுள்ள திருவாக்கி
னால், ஏ பிரம்மனே, நான் மகிழ்ச்சி அடைந்தேன். தேவ
பதம் வேண்டுமா, பிரபுத்வம் வேண்டுமா, உனக்கு இஷ்ட
மானவரத்தைக் கேட்பாய் என ஆக்ஞாபித்தார்.

உடனே பிரம்மதேவர் சகல தேவர்களுக்கும், ஈசனனை
தேவரீர் பிரசன்னராய் இருக்கும்பொழுது கிடைக்காத
வஸ்து மூவுலகில் என்ன இருக்கிறது. உம்முடைய பாத
தரிசனத்தினால் எல்லாம் கிடைத்துவிட்டது. கிருதார்த்த
னாகவும், தன்யனாகவும் ஆகிவிட்டேன். இஷ்டத்தை
அடைந்துவிட்டேன். தாங்கள் அனுக்கிரகஞ் செய்ய பாத்
திரனாக இருப்பேனானல், தேவரீருடைய ஆனந்ததாண்டவ
தர்சனத்தைக் காண விருப்புளளவனாக இருக்கிறேன், என்
றும் உம்முடைய அனுக்கிரத்தால் உலகங்களைச் சிருஷ்டிக்



[illegible]ருத்தியமும், சகல மனிதர்களுக்கும், தேவர்களுக்கும்,
பிதா மகனாக இருக்கையும் அடைந்திருக்கிறேன். இந்த
உயர்வைவிட வேறு யாது இருக்கிறது, ஆதலால் வேறொன்
றிலும் விருப்பில்லை. நடனத்தைக்காணும் வரத்தை கொ
டுக்கவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்.

இதனைத் திருச்செவியேற்ற சந்திரமௌலியானவர்,
ஏ பிரம்மனே, நீ நமது நடனத்தைக்காண விரும்புவாயா
னால், எமக்கு எவ்வாறு காசி க்ஷேத்திரம் பிரியமாயிருக்கி
றதோ, அவ்விதமே பிரியமான தக்ஷிணப்பிரயாகை என்
னுந் திருநாமம்புனைந்த புண்ணிய ஸ்தலத்திற்கு போவாய்
என்றும் திருவேணி சங்கமம் என்று மறுபெயருடைய
தாயும், சகல உலகங்களைப் பரிசுத்தஞ் செய்கிறதாயும், சகல
தீர்த்தங்களுக்கும் ரகசியமாயும் உள்ள அத்தலத்தைப்
பார்த்த க்ஷணத்திலேயே கோடிமகா பாதகங்கள் சூரியோ
தயத்தில் இருட்டைப்போல் நாசமடையும், மேருபர்வதம்,
கைலயங்கிரி, மந்தரபர்வதம் இவைகள் எப்படிப் புண்ணி
யத்தைத் தருகிறதோ, அவ்வாறே புண்ணியத்தைத் தரு
கிறதாயும், காசி, விருத்தாசலம், சிதம்பரம், ஸ்ரீ சைலம்,
கோகர்ணம், இராமேஸ்வரம், இவைகள் எவ்வாறு முக்தி
யமோ அவ்வாறே அத்தலங்களுக்குச் சமானமாயும், முத்தி
யைத் தருகிறதாயும், ஓர் தடவை அடைந்ததனால், மனிதர்க
ளுக்கு, சுகத்தைக் கொடுக்கிறதாயும், உள்ள அப்பெரிய
ஸ்தலத்திற்குச் சென்று அநேக புண்ணிய யாகங்களைச்செய்
யும்,யாகமுடிவில், சகல தேவர்களும் சூழ்ந்துள்ள உனக்குச்
[illegible]ல சுகத்தையுங் கொடுப்பதான ஆனந்த தாண்டவத்தைக்
[illegible]ண்பிப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இதனைக்கேட்ட பிரம்மதேவர், ஏ உமாநாதரே உமக்
குப் பிரீதியாயுள்ள அந்த புண்ணிய ஸ்தலமானது என்

லறியப்படாததாக இருக்கிறது. ஆதலால், அதனடையாளத்தையும், எவ்வாறு, தேவரீருக்குப் பிரீதியைத்தந்தது என்பதையும், சகல புண்ணிய ஸ்தலங்களைக் காட்டிலும் எவ்வாறுயர்ந்தது, என்பதையும், அடியேனுக்கு விளங்க உரைத்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

உடனே பரமசிவன் ஏ பிரம்மதேவனே மனோகரமான அந்த ஸ்தல மஹிமை யாதெனில், அந்த ஸ்தலத்தைப் பார்த்ததினால் எமக்கு மன்மதனிடத்தினின்றும் உண்டான சந்தாபம், நீங்கி அதிக சுகம் உண்டாயிற்று. ஞானசக்தி, பராசக்தியுடன் சித்தியை யடைந்தேன். வாக்குக் கெட்டாததான அந்த ஸ்தல மான்மியத்தைச் சொல்வதற்கு விஷ்ணு முதலிய சகல தேவர்களும் சக்தியற்றவ ராவார்கள். எந்த ஸ்தலத்தில் மனிதர்களுக்கு அகங்காரமானது உண்டாகாமலிருக்கிறதோ, ஞானாநந்த ரஸம் உண்டாகிறதோ அப்பேர்ப்பட்டதாயும், சௌக்கியத்தைத் தருகிறதாயும், முத்தியைக் கொடுக்கிறதாயுமுள்ள கூடலையாற்றூரைக் காட்டிலும் பூமியில் வேறு ஸ்தலம் பார்த்தது கிடையாது. கைலையங்கிரியும், மந்தர பர்வதமுங்கூட இவ்வளவு மேன்மை பொருந்தியதாக யில்லை. ஆதலால், அந்த ஸ்தலத்தின் பெருமையை விரிவாகக் கூறுகிறேன், கேட்பாயாக என்று சொல்லத் தொடங்கினார்.

பிரமன் வரம்பெறு சருக்கம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# நந்தி வரம்பெறு சருக்கம்.

பரமசிவனானவர் பிரம்மதேவனைப் பார்த்து ஏ பிரம்மனே, முன்காலத்தில், விஷ்ணு, இந்திரன், முதலிய சகல தேவர்கூட்டங்களும், தாரகன், என்னும் அசுரனால், பீடிக்கப்பட்டு, தங்கள் தங்களுடைய ஸ்தானத்தை எப்பொழுது இழந்தார்களோ, அப்பொழுதே அத் தாரகனுடைய நாசத்தைக் குறித்து, முருகக்கடவுளை உண்டுபண்ணும்பொருட்டு, கைலையங்கிரிக்கு வந்தார்கள். அப்போது தாக்ஷாயணியின் பிரிவினால், இரவும் பகலும், வைராக்யத்தை அடைந்து, ஆத்ம த்யானஞ்செய்து, கல்லாலின்கீழ் தக்ஷிணாமூர்த்தி ரூபத்தையடைந்து, ஆத்மஞ் ஞானிகளான, ரிஷிகூட்டங்களாற் சேவிக்கப்பட்டு, பால்யமாயும், சர்வகால சொரூபியாயும், ஏகராயும், மமதையற்றவராயும், சாந்தராயுமுள்ள, நாம், சத்தியாதி லக்ஷணமுள்ள பிரம்ம சொரூபத்தைச் சின்முத்திரையினால் ரிஷிகளுக்கு அறிவிக்கும்பொழுது, அந்த தேவர்களெல்லாரும், மமதையின்றி இருக்கும் எம்மைப் பார்த்து, நமக்கு உதவிசெய்யும் முருகக்கடவுளது பிறப்பு எவ்வாறு உண்டாகப்போகிறது என்று யோசித்துப் பின் [illegible]தனை வரவழைத்து தேவகாரியத்தின் பொருட்டு நீ [illegible]சிவனிடத்திற் செல்வாய் என்று கூற, அம்மன்மதன் [illegible] தேவர்களே, பரமசிவனது சன்னதிக்கு என்னை அனுப்பாதீர்கள், அவருடைய எதிரில் போகமாட்டேன், அவரது அருகிற் செல்ல எனக்கு சக்தியுமில்லை. அவ்வாறு போவே

னுயின் உயிருட னிருக்கவுமாட்டேன், யாது காரணமென்றால், பரமசிவனானவர், சகல வுயிர்களுக்கும் பயங்கரமான காலகூட விஷத்தையுண்டார். திரிபுரர்களும் எரிக்கப்பட்டார்கள் கெஜமுகாஸுரனுடைய பிராணனை போக்கினார் யமனை சம்ஹாரம் செய்தார் இன்னும் அவரது உத்தரவினால் வீரபத்திரரானவர் யாகமத்தியில் தக்ஷப்பிரஜாபதியை கொன்றார் ஆதலால் பரமசிவனுக்கு சிறிது கோபம்வந்தால் இவர்களுடைய கெதிதான் எனக்கும் கிடைக்கும் எல்லாவற்றையும் உணர்ந்த நீங்கள் அறுப்பாதீர்கள் உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று கூறிய மன்மதனுடைய வார்த்தையைக் கேட்ட சகல தேவரும் நல்ல வார்த்தையினால் சமாதானம் செய்து எங்களுடைய காரியத்தை நீ செய்வியேயானால் உனக்கு தீர்க்காயுளும் தருகிறோம் உலகத்தில் மகா பெரியோர்கள் தங்கள் காரியத்தைக் கூடவிட்டு பரோபகாரத்தில ஆசையாயிருப்பார் என்று கேள்விப்பட்டதில்லையா ஆகையால் இரதியோடும் வசந்தனோடும் கூடி அரவிந்தம் யென்கின்ற பாணத்தினால் பூசை செய் அந்த பாணத்தினால் அடிபட்ட பரமசிவன் அம்பிகையோடும் சேர்ந்துவிடுவார் சேர்ந்தவுடன் சுப்பிரமணியர் உற்பத்தியாவார் அவரால் தாரகன் நாசத்தை அடைவான் ஆதலால் அவ்வாறு செய்து எங்கள் பயத்தை நீககவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

உடனே மன்மதன் நடுங்கிக்கொண்டு எம்மிடம் வந்து புஷ்பபாணத்தை வேகமாகப் பிரயோகம் செய்தான். அதைப்பார்த்து கோபத்தினால் சிவந்த நெற்றிக் கண்களால் பார்த்தேன். பார்க்கப் பட்ட மன்மதனுடைய சரீரம் யெரிந்து சாம்பராகப் போயிற்று அப்பொழுது யெரிந்து போன மன்மதனையும் கோபத்தோடு கூடிய நம்மை



யும் பார்த்த தேவர்கள் நாலு பக்கத்திலும் ஓடினார்கள், கோபாக்கினியினால் தகிக்கப்பட்டும் மன்மத பாணத்தினால் பீடிக்கப் பட்டும் இருந்த நாம் அவ்விடத்தை விட்டு கிளம்பி, அதி வேகமாக நந்தியின் மேலேறிக் கொண்டு காசி க்ஷேத்திரம் வந்து சில காலம் வசித்தேம் அவ்விடத்தில் அத்தாபம் நீங்காமல் போக. ஸ்ரீசைலத்தில் சில காலமும் காளகஸ்தியில் சிலகாலமும் வசித்து வந்தோம் இவ்விடங்களிலும் அத்தாபமானது நீங்காமையால் சிதம்பரம் வந்து விருத்தாஜலத்திற்கு போகும் பாதி வழியில் மேன்மையான சௌக்யத்தை அடைந்து ஆச்சர்யம் உற்றோம் ஆகாயமார்க்கமாய் போகிற எமக்கு இது வரையிலும் உண்டாகாததான ஆனந்தம் எவ்வாறு உண்டாயிற்று என்றெண்ணி நோக்குமிடத்து மணிமுத்தாநதி வெள்ளாறு சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் எவ்விடத்தில் கூடியிருக்கிறதோ அந்த தீர்த்த ஜலத்தோடு கூடிய காற்று மேனியில் வீசிடதால் மன்மததாபத்தினால் விடுபட்டோம் சந்தேகமில்லை ஆகையால் எம்முடைய உத்தரவினால் இந்த தீர்த்தமானது சம்சாரதாபத்தை போக்கடிப்பது என்கிற கீர்த்தியை அடையும் என்று சொல்லி ஆகாசமார்க்கத்தில் வேகமாக சென்ற நந்தியினின்றும் இறங்கி மூன்று நதியும் சேர்ந்த அந்த மகா நதியின் தென்கரையில் ஞான சக்தி பராசக்தி ஆகிய இவர்களுடன் வசித்தேம். பிறகு நந்திதேவன் அந்த ஸ்தலத்தையும் ஞான சக்தி பராசக்தியுடன் கூடின நம்மை [illegible]த்தான், சாஸ்திர பிரகாரம் பூசைசெய்து, சரணமடைந்தான், [illegible]டைய துக்கத்தை போக்கடிக்கிறவாயும் விஷ்ணுவினு[illegible] நேத்திராவிந்தங்களினால் பூஜிக்கப்பட்ட பாதகமலங்களோடு கூடினவராயும் சகல வுயிர்களுக்கும் இன்பமளிக்கிறவாயும் சூரியன் சந்திரன் அக்கினி இவர்களை முக்கண்

ணைக உடையவரும் மகாமேருமலையை வில்லாக உடைய வரும் பரமேஸ்வராயுமிருக்கிற மகேஸ்வரரை மிகவும் எளிய னாகிய நான் நமஸ்கரிக்கிறேன்.

முல்லை மலர் சங்கு வெண்சந்தனம் இவைகளைப் போன்ற வெண்மையான விபூதியினால் அழகான சரீர முடையவராயும் மந்தரபருவதத்திலிருக்கிற முனிவர்களு டைய மனத்தையும் வெள்ளியங்கிரியையும் ஸ்தானமாகவு டையவராயும், சந்திரனை சிரசில் தரித்தவராயும் இரவும் பகலும் உமாதேவியாரால் ஆலிங்கனம் செய்யப் பட்ட இடது பாகத்தையுடையவராயும் மந்தகாஸத்தையுடைய முககமலத்தை யுடையவராயும் சம்சார சாகரத்தினின்றும் தாண்டச் செய்கிறவராயுமுள்ள பரமசிவனை. பரமதாசனை நான் நமஸ்கரிக்கிறேன்.

வாஸுகியைக் குண்டலமாக தரித்தவராயும் சிரேஷ்ட மான சூலத்தை ஆபரணமாக. உடையவராயும் அழிவு யில் லாதவராயும் அந்தணர்கள் போல் நிர்மலமாயும் மாதுளம் பூ கோவைப் பழம் இவற்றையொத்த அதரங்களோடு கூடின வராயும் பூமிக்கு கற்பக விருக்ஷமென்று சொல்லத் தகுந்த இரண்டு கைகளோடு கூடினவராயும் ஆச்சாரிய சிரேஷ்டராயும் இருக்கிற மகேஸ்வரரை இரவும் பகலும் நான் நமஸ்க்கரிக்கிறேன்.

அஷ்ட மூர்த்தியாயும் மனோக்கியமான குணத்தை யுடையவராயும் மகரிஷிகளால் சேவிக்கத் தகுந்தவராயும், தனக்கு. அடையாளமான ஞானசக்தி பராசக்தியோடு விளங்குகிறவராயும் ஆயிரங்கோடி சூரியன் போல் தேஜோ. ரூபியான மகேஸ்வரனை வணங்குகிறேன். மானச சொரூபி யாயும் உபாதியற்றவராயும் வார்த்தைகளை பிரேரணை செய்



தேவராயும் பேச்சுக்குக் காரணராயும் பிரகிருதிக்கு அப்பா லும் சகல சாக்ஷியாயும் தன் கருமாவை நியமனம் செய்கிற வராயும் வேதங்களுக்கு முடிவாயும் சச்சிதானந்த சொரூப ராயும் இருக்கிற பரமசிவனை. அடியேனாகிய நான் இருத யத்தில் எப்பொழுதும் வணங்குகிறேன்.

சாந்தராயும், இரண்டற்றவராயும், ஈஸ்வரராயும் குண மற்றவராயும் ஓங்காரத்தின் முடிவில் உண்டான நாதசொரூ பத்தின் உற்பத்தியின் சொரூபராயும் ஆகாசம்போல்உள்ளும் புறமும் அமிர்தமாயும். அளக்க முடியாதவராயும், எங்கும் நிறைந்தவராயும், அண்டினவரிடத்து அன்புள்ளவராயு முள்ள சிவனை தியானம் செய்கிறேன். என்று இவ்விதமாக தோத்திரம் செய்து நந்தி தேவர் மௌனமடைந்து சந்தோ ஷத்தினால் மலர்ந்த கண்களுடையவராய் மெய் மறந்து தண் டம்போல் கீழே விழுந்து வணங்கினார்.

வணங்கின நந்தி தேவரை எமது கைகளால் தூக்கி மார்பில் அணைத்து. அருகில் உட்காரவைத்து மிகுந்த அன்புடன் ஏ நந்திதேவா! உன்னுடைய தோத்திரத்தினால் சந்தோஷ மடைந்தோம். உனக்கு இஷ்டமான வரத்தைக் கேள் எனக்கூறிய அளவில் அப்பிரமதேவர் மகாபரிசுத்த மாயும் எஜமானனுக்கு சுகத்தைத் தருவதாயும் சந்தா பத்தைப் போக்கடிக்கிறதாயும் உள்ள இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிற மனிதர்களுக்கு இஷ்டமான வரங்களை இரண்டு சத்திகளுடன் கொடுத்துக்கொண்டு இருக்கவேண் டும். புண்ணியமான இந்த திரிவேணி சங்கம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மூன்று தாபங்களைப் போக்கடிக்கிற தேவ ரீரைப் பூஜித்து என்னால் செய்யப்பட்ட தோத்திரங்களினால் துதி செய்கிறவர்கள் யாரோ அவர்களுடைய சகல மனோ ரதங்களையும் தீர்க்காயுளையும் அடையும்படி செய்யவேண்

டும் என்றும், பூமியில் சுகம் மாத்திரம் உம்மால் சொல்லப் பட்டது உம்முடைய பூசையும் என்னால் செய்யப்பட்டது. ஆகையால் அநேக வரங்களைக்கொடுப்பதோடு இந்த ஸ்தலத்திற்கு அதிகமான்மியத்தைக் கொடுக்கவேண்டு மென்று பிரார்த்திக்க அவ்வாறே ஆகட்டு மென்று அந்த ஸ்தலத்திற்கு ஆதிக்கத்தைக் கொடுத்தேம். அந்த நந்தி தேவனுக்கும் அநேக வரங்களைக்கொடுத்து அவருடன் கைலாசம் வந்தேம். ஓ பிரமதேவனே! அன்று முதற்கொண்டு அந்த ஸ்தலமானது எமக்கு மனோக்யமாயும் சம்சாரதாபத்தைப் போக்கடிக்கிறதாயும் ஆகிவிட்டது ஆகையால் நீயும் அவ்விடம் போய் அவ்விடத்திலேயே என் பிரீதியின் பொருட்டு அநேக யாகங்களைச் செய்து அவ்விடத்திலேயே வாசம் செய் என்று உத்திரவு இட்ட சிவ பெருமானுடைய அமிர்த வார்த்தைகளைக் கேட்ட பிரமதேவர் சந்தோஷமடைந்த பரமசிவனை நமஸ்கரித்து அந்த ஸ்தல தீர்த்தத்தைச் சேவிப்பதற்காக புறப்பட்டார் என வியாசர் கூறினார்.

நந்தி வரம்பெறு சருக்கம்

முற்றிற்று.

---

184826. சென்னை-600 005.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# திரு நிர்த்தன சருக்கம்.

அதன்மேலும் வியாசர் கூறத்தொடங்கினார். பிரம்ம தேவர் பரமசிவனைத் தியானித்தவராய் அன்னவாகனத்திலேறிக்கொண்டு சம்சாரதாபத்தைப் போக்கடிக்கிற தவிணைப் பிரயாகையென்னும் க்ஷேத்திரத்தை வெகு தூரத்தில் பார்த்து நமஸ்கரித்தார். சாதுக்களின் மனம்போன்ற நிர்மலமான அதன் பின்னர் திரிவேணி சங்கமத்தின் தீர்த்தத்தைப்பார்த்து சகல வியாதிகளாலும் கர்மங்களினாலும் பீடிக்கப்பட்டவர்களுக்கு அமிர்தமாகவும், பிராணனை இச்சிக்கிறவர்களுக்கு பிராணனையும் இருக்கிறதென்று எண்ணினார். வெண்ணிறமான தீர்த்தமும் மத்தியில் செம்மை நிறமான தீர்த்தமும் உடையதாக அந்த மகா நதியானது விளங்கிற்று. ஏ சுகமுனியே! மூன்று தீர்த்தங்களும் ஒன்றோடு ஒன்று சேர்ந்துகொண்டதாயும் தாமரை, குவளை, ஆம்பல் நீலோற்பலம் இந்த மலர்களால் விளங்கப்பட்டதாயும் நீர்க்கோழி நீர்க்காக்கை சக்கரவாகம் ஆகிய பக்ஷிகளால் அலங்காரம் செய்யப்பட்டதாயும் மீன்கள் ஆமைகள் தவளைகள் இவைகளுக்கு இருப்பிடமாயும் புண்ணியத்தை தருவதாயும் உள்ள இந்த தீர்த்தத்தைப் பார்த்து பிரம்மதேவர் மிக சந்தோஷமடைந்தார்.

பிறகு அத்தீர்த்தத்தின் தென்கரையிலுள்ள ஆலமரத் தடியில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானை த்யானம் செய்து மிகுந்த பொறுமையோடு கூடியமனத்தவராய் உண

வின்றி மேன்மையான தவம்செய்தார் அதன் பின்னர் பரமசிவனைக் குறித்து யாகம்செய்து திருப்தி உண்டுபண்ணும் பொருட்டு ஒரு மாதகாலம் மிகுந்த முயற்சியுடன் சகல முனிவர் கூட்டங்களையும் அழைத்தார் பிரம்மதேவர்களால் அழைக்கப்பட்டவரான வசிஷ்டர் வாமதேவர் ஹமேகோளர் கௌதமர் சுகர் கண்ணுவர் பராசரர் சதகௌயர் ஜாபாலி மாண்டவியர் கார்த்தியானர் தெக்ஷர். அக்ஷபாதர் கௌசிகர் வியாக்ஞவல்கியர் பிருசங்கர் சத்தியவாதி வசுகாவஷேயர் அக்ஷ்டவக்கிரகர், ரோமசர், புலகர்,கிருது, முதலான அநேக முனிவர்களும் மிகவும் சந்தோஷத்துடன் வந்து சேர்ந்தார்கள்.

மிகவும் மேன்மை தங்கிய திரிவேணி சங்கமதீர்த்தத்தில் திவ்யஸ்நானம் செய்து தூயமனத்தவராய் நந்தியம் பெருமானால் முற்காலத்தில் பூசிக்கப் பட்ட ஆலமரத்தடியில் விளங்கா நின்ற பரமசிவனை நால்வகை மலர்களால் அர்ச்சித்தார். தவம் செய்வதற்கு ஒரு ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டார். பிறகு தன்னால் அழைக்கப்பட்ட முனிவர்களைப் பார்த்து. ஏ, ரிஷிகளே, பரமசிவன் திருப்தியின் பொருட்டு இவ்விடத்தில் யாகம் செய்ய விரும்புகிறேன். அந்த யாகத்திற்கு நீங்கள் உதவியாக. இருக்கவேண்டுமென்று கூறினார். அவ்வார்த்தையைக் கேட்ட சகல முனிவர்களும் தங்கள் உத்தரவு படி உதவியாக இருக்கிறோம் என்றுரைத்தார்கள். இதனைத் திருச் செவி மடுத்த பிர்ம்மதேவர் விஸ்வகருமாவை வரவழைத்து அஷ்டாவக்கரகர் உத்தரவுபடி யாகஞ் செய்வதற்கு யாகசாலை ஒன்று நிர்மானம் செய்யும்படி கட்டளை யிட்டார்.

உடனே விஸ்வகர்மா அக்ஷ்டாவக்ரகர் திருவுளப்படி யாகத்திற்கு வேண்டிய வஸ்திரம் ஆபரணம் அரசு கருங்



காலி முதலிய எல்லாவித பொருள்களும் யாகசாலையும், ஜனங்கள் வசிப்பதற்கு அநேக இடங்களையும் முனிவர் குழாங்கள் தங்குவதற்கு அநேக ஆசிரமங்களும் கருங்காலி கதகவிருட்சம் முதலியவைகளால் செய்த யூபஸ் தம்பங்களும், இன்னும் அநேக விசித்திரமான பாத்திரங்களும் நிர்மாணம் செய்தான். முனிசிரேஷ்டர்கள் விஸ்வகர்மாவினால் செய்யப்பட்ட பொருள்களினால் மிகவும் மேன்மையாக விளங்கினார்கள். பிரம்ம தேவர் அநேக விதமான சித்திரான்ன வகைகளும் பலவிதமான பக்ஷணங்கள் பாயசம் துவையல் முதலிய பதார்த்தங்கள் மிகவும் ருசி உடையதாய் செய்ய வேண்டும் என்று காமதேனுவை அழைத்து ஆக்ஞை செய்தார். அதன் பிறகு இந்திரர் முதலிய லோகபாலகர்கள், பதினொரு ருத்திரர்கள் அஷ்ட வசுக்கள் பன்னிரண்டு சூரியர்கள் விசுதேவர்கள் மருத்தகணங்கள் வித்யாதரர்கள் கின்னரர்கள் சித்தசாரண பன்னகர்கள் இவர்களைத் தியானத்தினால் வரவழைத்தார். வந்த சகலதேவர்களுக்கும் அவரவர்கள் பெருமைக்குத் தகுந்த ஆசனம் முதலியவற்றையும் மதுவர்கத்தையும் கொடுத்துஉபசரித்தார். பிறகு பிர்ம்மதேவர் யாகத்தில் கணபதி, முருகர், அம்பிகை இவர்களைப் பூஜித்து சகல தேவர்களால் துதிக்கப்பட்டு சரஸ்வதியுடனே யாகதீக்ஷை பெற்றார்.

மேற்கூறிய யாகத்தில் அஷ்டாவக்ரக முனிவர் பிர்மாவாகவும் கௌக்ஷிதகர் உத்காதா வாகவும் ரோமசர் அத்துவாயுவாகவும் வசிக்ஷ்டர் ஹோதா வாகவும் அகஸ்த்தியர் உப திருஷ்டயாகவும் எஜமானராகிய பிர்ம்மதேவர் ருத்விக்க[illegible]ாடு பரமசிவனைத்துதிசெய்து சகல தேவர்களுக்கும் அக்[illegible] முகமாக அவிர்ப்பாகம் கொடுத்தார். இந்திரர் முத[illegible]ய சகலதேவர்களும் அந்த அவிர்ப்பாகத்தை அடைந்தி

னால் மிகவும் திருப்தியுடன் விளங்கினார்கள். சகல ரிஷிகளும்பிர்மதேவரால் பூஜிக்கப்பட்டார்கள். இவ்வாறு பிர்ம்மதேவர் அநேக யாகங்களைச் செய்தார்கள். கடைசியாக பாசுபதம் என்கிற யாகத்தை பன்னிரண்டு வருடகாலம் மிகுந்த அன்புடன் செய்தார். ரிஷிகளுக்கு அன்னம் ஆடை ஆபரணம் முதலிய அநேக விதமான இரத்தினங்கள் அநேக பசுக்கள் இவைகளை கொடுத்தார். மற்றயோர்களுக்கும் சிவப்பிரசாத்தை மேற் கூறியபடியே கொடுத்தார். இவ்வாறு கொடுத்துயாக முடிவில் (அவபிரத ஸ்நானம்) செய்கிறபோது தேவ துந்துபி வாத்தியத்துடன் ஆகாயத்தில் ஒரு பெரிய சப்தம் உண்டாயிற்று. அதைக்கேட்ட பிர்ம்மதேவர் பரமசிவனை தியானித்துக்கொண்டு சகல ரிஷிகளோடும் ஸ்நானம் செய்து சீக்கிரமாய் யாக சாலைக்கு வந்து அஞ்சலி பந்தனம் செய்து ஆகாயத்தின்கண் சகலதேவர்கள் சூழ ரிஷப வாகனத்தின்கண் உமையொருபகாராய் விளங்குகின்ற பரமசிவனைத் தரிசித்துக் கொண்டிருக்கையில், சந்திரமௌலியாயும் நீலகண்டராயும் விருப்பமானகண்களை உடையவராயும் சச்சிதாநந்தசுரூபராயும் கருணைபங் கடலாயும் பசுபதியாயும் பிரத்தியக்ஷமாய் சம்சாரபந்தத்தை நிவர்த்தி செய்கிறவராயும் எல்லாம் அறிந்தவராயும் மகேஸ்வரராயும் உள்ள பரமசிவன்தருமமே உருவமான இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு பிர்ம்மா விஷ்ணு இந்திரர் முதலிய சகல தேவர்களாலும் உபாசிக்கப்பட்டு யாகத்தினால் திருப்தி அடைந்து அம்பிகை யுடனே பிரதம கணங்களும் சூழ பிர்மதேவன் அருகில் அவிர்ப்ப வித்தார்.

சகல தேவர்களும் சந்தோஷத்துடன் ஜெய விஜயீபவ என்றும் சகல முனிவர்களும் ஜெயஜெய வென்றும் சொன்னார்கள் பிர்மதேவரும் மிகுந்த சந்தோஷத்துடன் ஜெயவிஜயீபவ என்று மிகுந்த ஒலி கேட்கும்படி கூறினார். அநேகர்



வை நமஸ்காரம் செய்தார். மற்றய தேவர்களும் ரிஷி
களும் ஆநந்த பாஷ்பத்தோடு கூடிய கண்களை உடையவராய்
நமஸ்காரம் செய்தார்கள் பரமசிவனை சொரண மயமான
சிம்மாசனத்தில் எழுந்தருளி வித்து அர்க்கியம் கொடுத்து
விதிப்படி பூஜை செய்தார். அப்படியே சகல தேவர்களும்
முனிவர்களும் பூசித்து பிர்ம்மதேவருடன் சேர்ந்திருந்தார்
கள் பிர்ம்மதேவர் மறுபடியும் சிவபெருமானுடைய பாத கம
லங்களை பூஜை செய்து நமஸ்காரம் செப்தார் வாக்குக்கும்
மனத்திற்கும் எட்டாதவரான உமை யொருபாகர் திருவுள
மிரங்கி பிர்ம்மதேவரைப் பார்த்து கம்பீரமாய் ஓ. பிரம்ம
தேவனே! உன்யாகத்தினாலும் பக்தியுடன் கூடின பூஜை
யினாலும் மிகுந்த தவத்தினாலும் மிகுந்த திருப்தி அடைந்
தேன். இஷ்டமான வரங்களைக் கேட்பாயாக என்று கூறி
யருளினார்.

எம்பெருமானுடைய வார்த்தையைக்கேட்ட, பிர்ம்ம
தேவர் சந்தோஷமுள்ள மனத்தவராய் கருணை நிதியே
கயிலையிங்கிரியில் தேவரீர் திருவாய் மலர்ந்தருளியபடி
ஆனந்ததாண்டவத்தைத்தெரிசிக்க விரும்புகிறேன் ஆதலால்
தேவரீர் ஆநந்த தாண்டவம் செய்ய வேண்டுமென்று பிரார்த்
தித்தார் இதனைச் திருச்செவியேற்ற பரமசிவன் ஆனந்த
தாண்டவம் செய்வதாகத் திருவாய் மலர்ந்தார் இதனைக்
கேட்ட, சகலதேவ ரிஷிகளும் ஜெயஜெய வென்று கூறி
புஷ்பமழை பெய்தார்கள் சிலமுனிவர்கள் தோத்திரம் செய்
தார். சில ரிஷிகள் நிர்த்தனம் செய்தார்கள் சிலர் ஒருவருக்கு
ஒருவர் ஆலிங்கனம் செய்தார்கள். சிலர் பரமானந்தத்தை
அடைந்தார்கள். தேவலோகத்தில் நின்றும் இந்திரன் புஷ்ப
மழை பெய்தான். அநேக ரிஷிகள் நேத்திரா னந்தத்தை
அடைந்து சாமகானம் செய்தார் பூமியில் சகல தேவர்களும்

ஆநந்த தாண்டவத்தை தரிசிக்க ஆவலுடையவராய் நிர்த்தனம் செய்வதில் மிகவும் வல்லமை பொருந்திய, கந்தர்வ அப்ஸரஸ் கூட்டங்களுடன் கூடிக்கொண்டு பேரிமிருதங்கம் படகம், கொம்பு, காகளம், உடுக்கு, வீணை, புல்லாங்குழல் முதலிய அநேக வாத்தியங்களுடன் ஆரவாரம் செய்தார்கள் இவ்வாறிருக்கும்பொழுது திருமாலானவர் வைகுண்டத்தினின்றும் புறப்பட்டவராய் கெருடவாகனத்திலேறிக்கொண்டு தேவரிஷிகளின் மத்தியிலிருக்கும் பரமசிவனை நமஸ்காரம் செய்து பிர்மதேவரருகில் அமர்ந்தார். பிர்ம்ம விஷ்ணு முதலிய தேவர்களையன்றி அஷ்டாங்கிரர் முதலிய ரிஷிகளும் நிர்த்தனம் செய்யவேண்டுமென்று பரமசிவனிடத்தில் பிரார்த்தித்தார்கள் அவர்களால் பிரார்த்திக்கப் பட்ட சிவபெருமான் ஞானாநந்த பரிபூரணராய் இடதுகாலை கீழே ஊன்றியும் வலது பாதத்தை தூக்கிக்கொண்டும் இடது கையில் அக்கினியும் வலது கையில் உடுக்கையும் தரித்துக் கொண்டும் வேதங்களால் புராதனர் என்று நிர்ணயிக்கப் பட்டவராய் திரிபுராரியாய் திரிலோகப் பிராசராய் உலகத் தாரால் இச்சிக்கப் பட்டவராய் உமையொருபாகனாய், தன் அடியவர்களாகிய சாதகபக்ஷிகளுக்கு கருணாமுகிலாய் விபூதி அணிந்தவராய் மோக்ஷதா தாவாய் அஷ்ட மூர்த்தியாய் அதற்கு அப்பாற்பட்ட மேனியராய் அஞ்ஞான இருளை அகற்றுபவராய் இஷ்ட சித்திகளை தருபவராய் பிரமதேவர் இருதயத்தில் மகிழ்வை விளைவிப்பவராய் குபேரமித்திரராய் விளங்கும் சிவ பிரான் திமி திமி தை தை என்கிற சொற்களுக்கியைய பிர்ம்மதேவரது யாகத்தில் நிர்த்தனம் செய்தருளினார்.

அதன் பின்னர் நிர்த்தனம் செய்யும் பரமசிவனைப் பார்த்து. திருமாலானவர் பிரமன் முதலிய ஏ தேவர்களே



சிவ பெருமானுடைய சரண கமலத்தை வணங்கினவர்கள் முத்தியையடைவது திண்ணம். ஆகலால் நீங்கள் வணங்குங்கள் என்று கூறினார். அதனைக் கேட்ட பிர்ம்மேந்திராதி தேவர்கள் அவ்வாறே வணங்கினார்கள். பிர்மதேவர் நிர்மல சித்தராய் தேவ தேவராயும் திருவருட் செல்வத்தையுடையவராயும் விளங்கும் எம்பெருமானே தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

உலககாரணராய் சங்காரராய் பஞ்சபூதஸ்ரூபியாய் காலசூக்ஷ்மரூபியாய் ஜிதேந்திரியராய் ஆத்மரூபியாய் காலனைப் ஜடாதாரியாய் சந்திரசூடராய் விளங்குகின்ற தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

குணரகிதராய் குணரூபியாய் வியாபகராய் விளங்கும் தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

சகல பூதசாக்ஷியாய் சத்தியஞானாநந்தராய் சர்வாத்ம சைதன்னியராய் உபநிஷத்துக்களால் சகல தேவஸ்ரூபி யென்று துதிக்கப்படுபவராய் ஓங்காரப் பொருளாய் சர்வ சங்காரராய் திரு மூர்த்தி வடிவினராய் ஒலிவடிவினராய் வேதங்களாலறியப் படாதவராய் விளங்கும் தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

தேவரீரேயன்றி யாதொருபொருளும் உலகத்திலில்லாதால் அப்பொருளும் தேவரீர்தான் என்று துதி செய்தார் பிறகு விஷ்ணுவும் மற்றைய தேவர்களும் ஸ்தோத்திரம் செய்தார்கள்

இவ்வாறு சகல தேவர்களும் நிர்த்தன வல்லபேஸ்வரரை துதிசெய்து வாய்புதைத்து அவரருகில் நின்றார்கள் [illegible]ருகில் நின்ற அத்தேவர்களை நோக்கி கம்பீரமாக ஏ [illegible]ளே! ஏ ரிஷிசிரேஷ்டர்களே; ஏ பிர்மதேவரே! உங்க

ருக்கு மங்களம் உண்டாகட்டும் என்றும், பிரமதேவரை பார்த்து உம்முடைய தவத்தினாலும் உயர்ந்த பக்தியினாலும் அனேக யாகங்களினாலும் இந்த ஸ்தோத்திரங்களினாலும் உமையோடு மனமகிழ்ச்சியடைந்தோம் உனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்டுக்கொள்வாயாக என்றும் திருவாய் மலர்ந்தருளினார். உடனே பிரம்மதேவர் எம்பெருமானே அடியேன் கிருதார்த்தனாகிவிட்டேன் என்று மும்முறை விண்ணப்பம்செய்து தேவரீருக்கு நிர்த்தன வல்லபேஸ்வரர் என்னும் நாமம் எப்பொழுதும் விளங்கவேண்டும். இந்த ஸ்தலத்திற்கு அதிக மகுத்துவத்தை உண்டுபண்ணவேண்டும் என்றும் உலோகோபசாரியான பிரமதேவர் பிரார்த்தித்தார். அதைக்கேட்ட பரமசிவன் பிரமனே நீ என் திக்கான ஈசான்ய திக்கில் வசிப்பாய் இந்த புண்ணிய ஸ்தலத்தில் உன்னால் செய்யப்பட்ட யாக குண்டமானது பிர்ம தீர்த்தமென்கிற நாமத்தை அடையட்டும் திருவேணி சங்கம தீர்த்தத்திலும், பிர்ம தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து ஞான சக்தி பராசக்தியுடன் கூடிய நிர்த்த வல்லபர் என்ற பெயருள்ள எம்மைத் தெரிசிக்கிறவர்கள் இம்மையில் சகல இன்பங்களையுமடைந்து முடிவில் மோக்ஷத்தையும் அடைவார்கள் என்று வரத்தைக் கொடுத்தருளினார்.

பின்னர் விஷ்ணுவை நோக்கி ஏ விஷ்ணுவே! உனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்பாய் என்று உத்தரவிட அதனைக் கேட்ட விஷ்ணு ஏ தேவ தேவரே! பிர்மாவினால் எந்த வரம் கேட்கப்பட்டதோ அந்த வரமே அடியேனுக்கும் மற்ற இந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் விரும்பத்தக்க வரம். இதுவேயாகும் என்று கூறினார். உடனே பரமசிவன் அரிபிரமேந்திராதி தேவர்களே முனிவர்களே இவ்விடத்தில் உமையோடு கூடி உலகங்களை அநுக்கிரகம் செய்யும்பொருட்டு வசிக்கிறோம். ஆதலால் இத்தலத்தை விட வேறொரு புண்ணியஸ்தலம் உலகெங்குமில்லை பிர்மா



வினாலும், விஷ்ணுவினாலும் செய்யப்பட்ட தோத்திரங்கள் சகல சாஸ்திரங்களின் பொருளுள்ளனவாயும் எமக்கு மிகப் பிரீதியாயுமிருக்கின்றன. ஆதலால் இரண்டு தோத்திரங்களையும் படிக்கிறவர்கள் அதனைக் கேட்டவர்கள் சகல போகங்களையும் அடைந்து நன்மார்க்கத்தை அடைவர். ஏ! தேவர்களே மானஸ ஸரஸ விரஜாநதி கங்கை திருவேணி சங்கமம் எவ்வாறு மேன்மையுற்றனவோ அவ்வாறே பிர்ம குண்டமும் மேன்மையாயும் மனிதர்களுக்கு புத்தியையும் முத்தியையும் கொடுக்கும் என்றும் இப் பிர்ம குண்டத்தில் எவர்கள் யாகம் செய்கிறார்களோ அவர்கள் சாஸ்வதமான முத்தியை யடைவார்கள் என்றும் திருவாய்மலர்ந்தருளி ஆலமரத்தடியின்கண் விளங்காநின்ற சிவலிங்கத்திலேயே அந்தரத் தானமடைந்தார். அதன் பிறகு பிரமதேவரிடம் உத்தரவு பெற்று தங்கள் தங்களுடைய ஸ்தானங்களை அடைந்தார்கள். விஷ்ணு முதலிய தேவர்கள் தங்கள் பேரால் தீர்த்தங்களை நிர்மாணம் செய்து அந்தந்தத் தீர்த்தக் கரைகளில் சிவலிங்க ஸ்தாபனம்செய்து பூசித்து இத் திருவேணிசங்கம ஸ்தலமானது மூவுலகங்களிலும் பிரசித்தி பெற்று மகா பரிசுத்தமாய் விளங்குவதென்று சுகமுனிவரைப் பார்த்து வியாசமுனிவர் கூறியவுடன் சுகமுனிவர் வியாசரை நோக்கி குருவே இத் திருவேணி சங்கமத்தின் மகிமையைக் கேட்டு மனம் நிர்மலமாய் பரமானந்தமுடையதாய் யிருக்கிறதென்று கூறி இருதயத்தில் நிர்த்தன வல்லபேசரை தியானித்து வணங்கினார். பின்னர் தமது குருவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு அந்த திருவேணி சங்கம க்ஷேத்திரத்தை தெரிசிக்கப்புறப்பட்டார் திருவேணி சங்கமத்தை அடைந்து தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து சிவபெருமானை தெரிசித்து பிரமதேவர் உத்தரவினால் வெகு [illegible] அங்கேயே வசித்தார். சகல முனிவர்களும் வியாச [illegible] பூசித்து தத்தம் இடங்களை அடைந்தார்கள் வியாச [illegible] முனிவரும் அந்த தக்ஷிணப்பிரயாகை க்ஷேத்திரத்தை அடைந்தார்.

திரு நிர்த்தன சருக்கம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

# அகஸ்தியர் வரபெறும் சருக்கம்.

ஏ முனிவர்களே! இரகசிய மான ஸ்தலமகிமை கொஞ்
சமிருக்கிறது அது மிகவும் மறைத்து வைக்கத் தகாதது
அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள், அகஸ்திய முனிவர்
மனைவி விகாரத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டு இந்த க்ஷேத்
திரம் வந்திருந்து நிர்த்தவல்லபரின் கிருபையினால் சகல
இன்பமும் மிகுந்த கீர்த்தியும் அடைந்தாரென்று கூற முனி
வர்கள் அகஸ்திய முனிவருக்கு விரகதாபம் எவ்வாறு உண்
டாயிற்று அவர் அதினின்றும் எப்படி விடுபட்டார். இவற்
றையெல்லாம் அடியேங்கட்கு விரிவாய் சொல்லியருளும்
என்று பிரார்த்தித்தார்கள் அதைக் கேட்ட சூதமுனிவர்
களே மனிதர்களுக்கு புக்தி முக்தியைத் தருவதான அகஸ்
த்திய முனிவரின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்
கள் முன்னொரு காலத்தில் அகஸ்த்திமுனிவர் சிவபெரு
மான் கட்டளைப்படி தன் மனைவியோடு தென்றிசை
நோக்கி புறப்பட்டு சிவபிரான் திருவருளால் விந்தியமலையை
பூமியில் அடக்கி சிவ பெருமானை இருதயத்தில் தியானித்து
சக்கிய பர்வதம் போய் அப்பர்வதத்திலிருக்கிற சகல முனி
வர்களால் பூசிக்கபட்டு அவ்விடத்தில் மனைவியுடன் கூடி
தவஞ் செய்து கொண்டு வசித்தார் திருகாலஸ்நானம்
செய்து பஞ்சாக்ஷர செபம் செய்து முனிவர்களோடுகூட
அந்த சக்கிய மலையிலே வசித்து வருகையில் அவர் தவா
ராவாக அநேக காரணத்தினால் லோபாமுத்திரையானவள்
நதி ரூபத்தை யடைந்து கவேர மகாராஜானின் பெண்ணாக



ஆனாள் அப்பொழுது அகஸ்திய முனிவர் தன் மனைவியைப்
பார்த்து நீ என்னை விட்டு பிரிந்து செல்வது உசிதமில்லை
எதனால் என்னை விட்டு பிரிகிறாய் என்று கூறி வருந்தினார்
அப்பொழுது லோபாமுத்திரையானவள் அகஸ்திய முனி
வர் கண்களுக்கு தோற்றாமல் மறைந்து பிரமதேவரின் வாக்
கியத்தை நினைத்து வேகத்துடன் சமுத்திர சங்கமம் ஆனாள்
அகஸ்தியமுனிவர் மனைவியின் பிரிவாற்றால் மிகமோகத்தை
உடையவராய் அவளுடன் தொடர்ந்து புலம்பிக் கொண்டு
சென்றார் அவர் பல விடங்களிலும் திரிந்து தெய்வாதீன
மாக வெகு தூரத்திலிருந்து கூடலையாற்றாரை பார்த்த
அந்த க்ஷணத்திலேயே மோகத்தினின்றும் நீங்கி ஆச்சரி
யமடைந்து இவ்விடத்தில் எனது மோகந் தெளிய என்ன
காரணம் ஏற்பட்டது என்று யோசித்துக் கொண்டிருக்கை
யில் சிவபிரான் ஏ, அகஸ்தியனே! நீ இதற்கு மூன்று
யோசனை தூரத்தில் இருக்கிற திருவேணி சங்கமக்ஷேத்தி
ரத்தை தெரிசித்ததால் உனக்கு அற்பமோக நீக்கம் உண்
டாயிற்று. நாம் அந்த க்ஷேத்திரத்தில் பக்தர்களை ரக்ஷிக்கும்
பொருட்டு ஞானசக்தி பராசக்தி என்னும் இரண்டு சக்தி
களோடும் விளங்குகிறோம். அந்த க்ஷேத்திரத்தை அடைந்
தாயானால் உன் மோகம் முற்றும் ஒழியும் ஆகையால் விரை
வில் அங்கு போய் திருவேணிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து
நம்மைத் தெரிசித்து உனக்கு இஷ்டமான வரங்களை பெறக்
கடவாய் யென்று ஆகாய வாணியாய் கூறி அருளினார்.
அதைக் கேட்ட அகஸ்திய முனிவர் மிகவும் பக்தி உடைய
வராய் ஆநந்தபரவசராய் இந்த ஸ்தலத்தை அடைய மிகப்
[illegible]முடையவராய் அங்கு நின்றும் கிழக்கு திக்கை நோக்
[illegible]சென்று திருவேணிசங்கமக்ஷேத்திரத்தை அடைந்து
[illegible]கிழ்ச்சியோடு திருவேணிதீர்த்தத்திலும் பிரம தீர்த்தத்
திலும் சங்கர்ப்பம் செய்து ஸ்நானம் பண்ணி நித்திய கர்மம்

முடித்து பிதுர்தர்ப்பணம் செய்து பின்னர் ஞானசக்திபரா சக்தி சமேத நிருத்தவல்லபர் யென்றும் நாமத்தை உடைய மகாலிங்கத்தை தெரிசித்து விதிப்பிரகாரம் பக்தியோடு பூசித்து ஸ்தோத்திரம் செய்வாராயினார்.

பிரணவ சொரூபியாய் ஞானானந்த உருவாய் ஞான போதகராய் விளங்கும் தேவரீரின் பொருட்டு நமஸ்காரம் விகற்பமில்லாதவராய் நித்தியராய் சங்கமற்றவராய் தன் இரண்டு சக்தியினால் படைத்தல் காத்தல் முதலியவற்றைச் செய்கிறவராய் விளங்குகிற தேவரீர் பொருட்டு நமஸ்காரம்.

வேதங்களால் அறிபவராய் வேதார்த்த சொரூபியாய் வேதங்களின் முதல் முடிவு என்னும் ஸ்தானத்தில் வசிப்பவராய் தாரக சொரூபியாய் அழிவு அற்றவராய் விளங்கும் தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்,

பஞ்சகிர்த்தியம் புரிபவராய் உலக வடிவனராய் அஷ்ட மூர்த்தியாய் இக்குப் பாலகர்களாய் விளங்கும் தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

மனம் வாக்குக்கு எட்டாதவராய் சகல ஆத்ம சொரூபியாய் தத்துவதீதராய் பூமி முதல் ஆகாசபரியந்தம் உள்ளும் புறமும் வியாபகராய் தத்துவ மசி முதலியவாக்குகளுக்கு லெக்ஷியார்த்தராய் அதீதராய் அந்த வாக்கியத்தினால் ஸ்தாபிக்கப் பட்டவராய் விளங்குகிற தேவரீரின் பொருட்டு நமஸ்காரம்.

சின் முத்திரையினால் திரிபதார்த்த லெக்ஷணத்தை விளங்குபவராய் லெக்ஷணா தீதராய் ஈசானம் தத் புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களையுடையவராய் இருக்கிற தேவரீர் பொருட்டு நமஸ்காரம் என்று அகஸ்தித்தியர் துதி செய்தார்.



பின்னர் அகஸ்த்திய முனிவர் சிவபெருமானை அடிக்கடி வணங்கி பாதிகண் மூடினவராய் தியாகம் செய்து கொண்டிருந்தார் அப்போது அவரால் தியானிக்கப் பட்ட எம்பெருமான் உமாசமேதராய் அவருக்கு காட்சிகொடுத்து அகஸ்தியனே உன்னுடைய ஸ்துதியினால் மனமகிழ்ச்சி அடைந்தோம் உனக்கு இஷ்டமான வரங்களை கேட்கக் கடவாயென்று கட்டளை இட்டருளினார் உடனே அகஸ்திய முனிவர் எம்பெருமானை. வணங்கி தேவரீரது கிருபையினால் அடியேன் கிருதார்த்தனாகி விட்டேன் என்றும் முறைகூறி தேவரீரின் ஆக்ஞையின்படி இந்த ஸ்தலத்தை அடைந்து தேவரீரை பூஜித்து தேவரீரது திருக்கோலத்தை தெரிசித்து தேவரீரது கிருபையால் விரகதாபத்தினின்று நீங்கினவனாய் முக்திசித்திப்பதற்கும் உரியவனாகி விட்டேன் இதைக் காட்டிலும் அடியேன் பிறத்தக்க பேறு உன்றில்லை. ஆயினும் தேவரீர் அடியேனுக்கு ஒரு வரம் தந்தருளல் வேண்டும். தேவரீர் அதுயாதெனில் முன்னொரு காலத்தில் அடியேனுக்கு உபதேசித்த தமிழ் பாஷையானது பூமியில் விருத்தியாகவேண்டும். தேவரீருடைய பாத கமலத்தில் எனக்குண்டான பக்தி அழியாமலிருக்க வேண்டும். இவற்றை அடியேனுக்கு திருவுள்ள மகிழ்ச்சியுடன் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார் எம்பெருமான் இவரை நோக்கி அகஸ்த்தியரே, நாம் உனக்கு முன் உபதேசித்த் அந்த தமிழ் பாஷையை உலகத்தில் விருத்தி செய்ய நமக்கும் பிரியம் உண்டு ஆகையினால் தமிழ் பாஷை விருத்தி யடையவும் உனக்கு நம்மிடத்திலுண்டான பக்தி அழியாமலிருக்கவும் வரம் தந்தோம் அன்றியும் நாமும் பிர்ம்மாவும், விஷ்ணுவும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாச [illegible]ரூபத்தை யடைந்து உனக்கு உபதேசித்த தமிழ் [illegible]ஷையை விருத்தி செய்கிறோம் இவ்வுலகத்தில் சகல புரா

ணங்களையும் பிரபந்த வடிவமாகச் செய்து விர்த்தியாக்கு
வோம் என்றருளி பின்னர் நமக்கு பிரீதியாக உன்னால்
செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரங்களை எவர்கள் படிக்கிறார்
களோ அவர்களுக்கு சகல இன்பங்களையும் தருவோம்
இந்த ஸ்தோத்திரங்களை திரிகாலங்களிலாவது ஏக காலத்
திலாவது நம்முடைய பூஜா முடிவில் நித்தியம் எவன் பாரா
யணம் செய்கிறானோ அவன் சம்சார சாகரத்தினின்றும்
முக்திக் கரையை அடைவான் இந்த ஸ்தோத்திரத்தை அந்
தணர் முதலிய எவ்வர்ணத்தவரும் படிக்கலாம் அங்ஙனம்
படிப்பவர்கள் சர்வ சாஸ்திரங்களும் கரை கண்டவர்களாய்
மிகுந்த புகழ்ச்சியை யடைந்து புத்திர பௌத்திரர்களோடு
சூழப்பட்டு முக்தியை அடைவார்கள் என்று அருளிச்
செய்து எம்பெருமான் அந்தர்த்தான மாயினார். அகஸதிய
முனிவரும் சிவபெருமானை தியானம் செய்துகொண்டு ஒரு
வருடகாலம் அந்த ஸ்தலத்தில் வாசம் செய்து பிறகு தன்
ஸ்தானத்தை யடைந்து மகேந்தர பர்வதத்திற்குப் போய்
அங்குள்ள தன் சிஷ்யர்களுக்கு தமிழ் பாஷையை கற்பித்து
வசித்து வந்தார். அது முதல் தமிழ் பாஷை திராவிட
தேசங்களில்பரமசிவன் வரத்தினால் விருத்தியாகி விளங்கிற்று
இந்தரகசிய மான விஷயத்தை உங்களுக்கு இன்று வெளிப்
படுத்தி கூறினேன். என்று சூத முனிவர் கூறினார்.

அகஸ்தியர் வரம்பெறு சருக்கம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

# கார்த்தியாயனர் வரம்பெருசருக்கம்

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி
தேவரீரால் அடியேங்களுக்குச் சொல்லப்பட்ட திருக்கூடலை
யாற்றூரின் நீளமும் அகலமும் எவ்வளவு தூரயோசனை
உடையன அதற்கு நாலுபக்கத்திலும் உள்ள க்ஷேத்திரங்
கள் எவை இவை முழுமையும் தேவரீரால் கேட்க விரும்பு
கிறோம். அடியேங்களுக்குச் சொல்லியருளும் என்று
பிரார்த்தித்தார்கள்.



சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கி முனி
வர்களே சிவபெருமானால் பிரமதேவருக்கு உபதேசிக்கப்
பட்ட இந்த ஸ்தலத்தினெல்லை நிர்ணயத்தை சொல்லுகி
றேன் சாவதானமான மனதுடன் கேளுங்கள். முன்
னொரு காலத்தில் சிவபெருமான் பிரமதேவரை நோக்கி
பிரமனே இந்த திருக்கூடலையாற்றூர் ஸ்தலத்தின் நீளம்
மூன்று யோசனை அகலம் மூன்று யோசனை உள்
ளனவென்று அறிவாய். இத்தலத்திற்குக் கிழக்கில் சிதம்
பரக்ஷேத்திரமும் மேற்கில் விருத்தாசலமும் வடக்கில்
கோபர்வதமும் தெற்கில் துவாரகையும் இருக்கின்றன.
இந்த க்ஷேத்திரத்தின் எல்லை எதுவரை யிலிருக்கிறதோ
அதுவரையிலுள்ள பூமியானது அதிக புண்ணியத்தைத்
தருமென்று சொல்லப்பட்ட க்ஷேத்திர நிச்சயத்தை நானும்
உங்களுக்குச் சொன்னேன்.

அந்த ஸ்தலத்தில் கார்த்தியாயன முனிவர் அதிக தபம்
செய்து இலக்சுமியைப் பெண்ணாக பெற்று விஷ்ணுவுக்குப்
பாணிக்கிரகணம் செய்துகொடுத்தார். இன்னும் போதா
யனர் முதலிய பல முனிவர்கள் தவஞ்செய்து இஷ்டசித்தி
களை அடைந்தார்கள் என்று கூறிய சூதமுனிவரைப்
பார்த்து முனிவர்கள் சூதமுனிவரே! கார்த்தியாயனர் எவ
ருடைய புத்திரர் எவ்விதமான தவஞ்செய்து லக்ஷ்மியை
பெண்ணாகப்பெற்று விஷ்ணுவுக்கு பாணிக்கிரகணம் எவ்வி
தம் செய்து கொடுத்தார் இவற்றை விஸ்தாரமாக சொல்லி
யருளுமென்று கேட்டார்கள்.

அதைக்கேட்ட சூதமுனிவர் சொல்லுகிறார். முன்
னொருகாலத்தில் கத்தியமுனிவருக்குப்பிள்ளையான கார்த்தி
யாயனர் போதாயன முனிவருக்கு சிஷ்யராக இருந்து
வித்யாப்பியாசம் செய்து சகல சிஷ்யர்களாகிய சகபாடிக
